Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/720)


முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 13 திங்கட்கிழமை (27.06.2011) பக்கங்கள் 16 ஓசை – 271




கௌரவிக்கும் செயற்பாடு மாணவர்களை ஊக்குவிக்கும் (05)



அபாரமான ஆட்டம் சென்.ஜோன்ஸ் வெற்றி (06)



பின் கதவால் நுழைவது எப்படி? (14)



வேலை வாய்ப்புச் செய்திகள் (12)

## வடக்கில் தேர்தல் பணி தீவிரம்;

## உயர்மட்டக் குழு யாழ். வருகிறது



(யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் களம் தொடர்பாகவும் தேர்தலையொட்டி மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து நேரடியாக ஆராயவும் தேர்தல் திணைக்கள உயர்மட்டக் குழு ஒன்று நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபருடனும், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் ஏனைய சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகளுடனும் இந்த உயர்மட்டக் குழு பேச்சுக்களை நடத்தவுள்ளது.

அத்துடன் நெருக்கடி நிலைமைகளை எவ்வாறு எதிர்கொள்ளவது என்பது குறித்தும் விசேட பணிப்புரைகளையும் வகுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, யாழில் அரசியல் கட்சிகளும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக சூழ்ச்சி; திரைமறைவில் சந்திரிகா



(கொழும்பு)

அரசாங்கத்துக்கெதிரான இரகசிய நகர்வுகளில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈடுபட்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை அரசாங்க சார்பு நிலையிலிருந்து மாற்றிக் கொண்டு பொருத்தமான நேரத்தில் எதிர்க்கட்சியுடன் இணைந்து அரசாங்கத்துக்கெதிரான செயற்திட்டமொன்றை முன்னெடுப்பது அவரது நோக்கமாக இருக்கின்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் ஒரு கட்டமாக அண்மையில் அவர் முன்னாள் பிரதமரும், சிரேஷ்ட அமைச்சருமான ரத்தினசிறி விக்கிரமநாயக்கவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைத்துள்ளார். அதன் போது இருவரும் ஒருமணித்தியாலம் வரை கருத்துப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தின் சிரேஷ்ட அங்கத்தவனான தான் தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதைப் பற்றி ரத்தினசிறி விக்கிரமநாயக்க அதன் போது மனவருத்தத்துடன் வார்த்தைகளை வெளிப்படுத்தியுள்ளார். தனக்கே இந்த நிலை (15 ஆம் பக்கம் பார்க்க)

## கம்பத்தில் தொங்கியது இளைஞரின் சடலம் வாதரவத்தையில் நடந்த மர்மம் என்ன?

(யாழ்ப்பாணம்)

பாடசாலை விளையாட்டு மைதானத்திலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது.

புத்தூர் பகுதியிலுள்ள வாதரவத்தை பாடசாலை விளையாட்டு மைதானத்தின் கால்பந்தாட்ட கோல் கம்பத்தில் கட்டப்பட்ட நிலையில் இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஒருவர் கொலை செய்யப்பட்டு அங்கு தொங்கவிடப்பட்டுள்ளதாக நேற்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பாலச்சந்திரன் சற்குணராஜா (வயது - 30) என்ற இளைஞனே கோல் கம்பத்தில் தொங்கவிடப்பட்டுள்ளதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் சம்பவ இடத்தில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நெடுங்கேணியில் சிங்களக் குடும்பங்கள் அரசிடம் முறையிட்டது கூட்டமைப்பு



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் வட பகுதியில் உள்ள நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பூர்வீக தமிழ் பிரதேசத்தில் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்திடம் முறையிட்டுள்ளது.

நெடுங்கேணியைச் சேர்ந்த கொக்கச்சான்குளம் என்ற இடத்தில் இந்தக் குடியேற்றம் நடைபெற்றுள்ளதாகவும் அந்த இடத்திற்குச் சிங்களப் பெயர் சூட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

வவுனியா அரசாங்க அதிபர் அலுவலகத்திற்குக்கூட இது பற்றி அறிவிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். சிவசக்தி ஆனந்தன், இந்த விடயம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சிகளினதும் ஒத்துழைப்புடனேயே தீர்வு

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கு ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியம் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படும் அதேவேளை, ஏனைய அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நிறுவுவது குறித்து சிங்கள வார இறுதி இதழ் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைப்பது தொடர்பில் சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம்; ஐ.தே.கட்சி தயாராகிறது

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

அதன்போது அரசாங்கத்தின் அடக்குமுறைகள் குறித்து நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்பைத் தெரிவிக்கவும், அத்துடன் அரசாங்கத்தின் மக்கள் விரோதப் போக்குகள் குறித்து பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தும் விதத்தில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கவும் ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாட்டில் ஊடக சுதந்திரத்தை இல்லாதொழித்து, ஜனநாயகத்தை சீர்குலைத்து, அடக்குமுறைகள் மூலம் தனக்கெதிரான (15 ஆம் பக்கம் பார்க்க)

## பனம் கைப்பணிப் பயிற்சி பூநகரியில் விசேட ஏற்பாடு

(முரசுமோட்டை)

பூநகரி கௌதாரிமுனைப் பகுதியில் பனைசார் கைப்பணிப் பயிற்சிநெறி ஒன்று ஆரம்பிக்கப்படவிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட பனை அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

மிக விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இப்பயிற்சி நெறிக்கு பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். பனைசார் கைப்பணி பயிற்சியைக் கற்று தமது சுயபொருளாதாரத்தை மேம்படுத்தும் ஆர்வமுள்ளவர்கள் இதில் கலந்து கொள்ள முடியும் எனவும் பனை அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை, இவ்வாறான பயிற்சி நெறி ஒன்று கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நான்கு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறியில் 15 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டுள்ளதாகவும் பனை அபிவிருத்திச்சபை மேலும் தெரிவித்துள்ளது. (110)


### மாணவச் செல்வங்களே

உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I இன் வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

"என்னுடைய சக பெண் போராளி வயிற்றுக்காக, தன்னை விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் போது அவளுக்குச் சாப்பாடு கொடுக்க முடியாத எனக்கு, அவளது உரிமைகளைப் பற்றிப் பேசுவதற்கு எந்த அருகதையும் கிடையாது"

**பி.பி.ஸி பேட்டியில் கே.பி**



# நெற்செய்கையில் நோய்த்தாக்கம்
# விவசாயிகளுக்கு விசேட ஆலோசனை



(முரசுமோட்டை)


கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெல்வயல்களில் சிற்றுண்ணிகளின் தாக்கத்தினால் இலைகள் மஞ்சள் நிறமடைந்து வருவதுடன், சந்துக்குத்திகளின் தாக்கமும் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் தத்தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்புகொண்டு ஆலோசனைகளைப் பெற்று இவற்றைக் கட்டுப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் பெருமளவு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஆயினும், ஒரு சீரான முறைக்கமைய விதைப்பினை மேற்கொண்டு செய்கையில் ஈடுபடும் போது நோய்த்தாக்கங்களின் அதிகரிப்பு ஏற்படுவது தடுக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் விதைப்பினை மேற்கொள்வதற்குரிய திகதிகள் அறிவிக்கப்பட்டிருந்தன. ஆயினும், அந்தத் திகதிக்குள் முழுமையாக விதைப்பு நடவடிக்கைகள் இடம்பெறாது. காலம் தாழ்த்தியும் விதைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமையில் ஒரே சீரான முறையில் வயலின் தன்மைகள் காணப்படாததால் பூச்சித் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளது என்று கருதப்படுகின்றது.

ஆகவே, விவசாயிகள் தத்தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்புகொண்டு ஆலோசனைகளைப் பெற்று சல்பர், கியூடான் போன்ற மருந்துகளை கையாள்வதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் விவசாயத் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர். (110)

# யாழ்.இரத்த வங்கிக்கு
# தினசரி இரத்தம் தேவை




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருபவர்களுக்கு அதிகளவு இரத்தம் தேவைப்படுகின்றது. தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 30 அலகு இரத்தம் பயன்படுத்தப்படுகிறது.

இதற்காகத் தினமும் 30 பேர் இரத்ததானம் செய்தால்தான் இரத்தத்தை நோயாளர்களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும் என யாழ்.போதனா வைத்தியசாலையின் பிராந்திய இரத்த வங்கி நிலையம் தெரிவித்துள்ளது.

விபத்துக்கள் மூலம் இழக்கப்படும் இரத்தத்தை ஈடு செய்யவே அதிகளவு இரத்தம் தேவையாகவுள்ளது. அத்துடன் வைத்தியசாலையில் பல்வேறுபட்ட சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்போது இழக்கப்படும் இரத்தத்தை ஈடு செய்ய இரத்தம் அவசியமாகவுள்ளது.

குருதிச்சோகை, தலசீமியா போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டு இரத்தம் குறைவடைந்தவர்களுக்கு இரத்தம் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் ஏற்ற வேண்டியதாகவுள்ளது. புற்றுநோய்ச் சிகிச்சை நாள்பட்ட சிறுநீரக நோய்க்கான சிகிச்சை என்பவற்றுக்கு இரத்தம் தேவைப்படுவதாகப் பிராந்திய இரத்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

# புதிய அந்தோனியார் ஆலயம்
# நாவற்குழியில் ஆரம்ப விழா

(சாவகச்சேரி)

150 வருட பழமைவாய்ந்த நாவற்குழி புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றுக் காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

யாழ்.மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநரும், முன்னாள் பங்குத் தந்தையுமான ம.வி.இரவிச்சந்திரன் அடிகளாரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின

அடிக்கல்லினை ஆலய பங்குத்தந்தை அ.யேசுரட்ணம் அடிகளார், ம.வி.இரவிச்சந்திரன் அடிகளார் ஆகியோர் இணைந்து நாட்டி வைத்தனர்.

இந்நிகழ்வில், கிராம அலுவலர் செல்வி பாலச்சந்திரன் பவித்திரா, பங்கு மக்கள் ஆகியோரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

# குழந்தை அரங்க குதூகலிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆண்டுதோறும் நடாத்தப்படும் குழந்தை அரங்க குதூகலிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வட மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் முத்து.இராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினராகச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் அ.கைலாய பிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இரண்டாம் வருட நாடகத்துறை முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களின் நெறியாள்கையில் உருவான எட்டு நாடகங்கள் மேடையேற உள்ளன. உள்ளகப் பயிற்சி ஆசிரிய மாணவர்கள் நாடகத்துறை மாணவர்கள், உள்ளகப் பயிற்சி ஆசிரிய மாணவர்கள், நாடகத்துறை மாணவர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

# வருடாந்த உற்சவம்

(மண்டைதீவு)

மண்டைதீவு முனைப்பு வயல் முருகன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும், 30 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தோற்சவமும், திருவூஞ்சலும் நடைபெறும் என கோவில் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (23)

# தென்னைவள கைப்பணி
# கச்சாயில் பயிற்சி நெறி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-கச்சாய் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நாளை 'தென்னம் பொருட்களாலான கைப்பணிப் பயிற்சி' இடம்பெறவுள்ளது.

காலை 9.30 மணிக்கு இடம்பெறும் இந்த வைபவத்திற்கு பிரதம விருந்திரனராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.


இந்தப் பயிற்சியில் தென்னைச் செய்கையாளர்கள் மற்றும் தென்னை வளத்தைப் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபட ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கச்சாய் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (11)

## தபால் சேவை வழமைக்குத் திரும்பியது

(கொழும்பு)

அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு அதிகாரிகளினால், மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்த பொழுதிலும், கொழும்பு மத்திய அஞ்சல் பரிவர்தனை நிலையத்தில் ஒரு லட்சம் கடிதங்கள் விநியோகிக்கப்படாத நிலையில் தேங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தேங்கியுள்ள அஞ்சல்களை துரித கதியில் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்புகள் அதிகாரிகளின் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.எஸ். வீரசேகர தெரிவித்துள்ளார்.




யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில், போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் கொடையாளர் ஒருவரைக் கௌரவிப்பதைக காணலாம்.


## படைமுகாம்களுக்கு அம்பாறையில் மூடுவிழா

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் இன்று இரண்டு விசேட அதிரடிப்படை முகாம்கள் மூடப்படவுள்ளது.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் காரைதீவு பகுதியில் அமைந்துள்ள விசேட அதிரடிப்படை முகாமும், கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் ஆகியனவே இவ்வாறு மூடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, மூடப்படும் இந்த விசேட அதிரடிப்படையினர் வவுனியாவுக்கும், மல்வத்தைக்கும் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



அண்மையில் மாத்தளை பேனாட் அலுவிகார விளையாட்டரங்கில் நடைபெற்ற இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கிடையிலான 20ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் 1500 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடம்பெற்று வெள்ளிப் பதக்கம் பெறும் யாழ்.கோண்டாவில் சாலை காப்பாளர் கே.புவிக்கு பிரதம அதிதி பதக்கம் சூட்டுவதைக் காணலாம். (27)


**31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்**



பூவுலகில் 01 11 1924

பொன்வானில் 29 05 2011

**முருகேசு நடராசா**

**அஞ்சலிப் பா**

முத்தே! பவளமே! முக்கனியே! சர்க்கரையே! யென
நித்தம் எமை வளர்த்தெடுத்த – சொத்தான
எங்கள் தந்தையரே! யெப்போ! யெங்கே! யினி
எம்முயிரைக் காண்போம் நாம்.

எமது அன்புத் தந்தை காலமான செய்தி கேட்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர்களுக்கும், பத்திரிகையில் அஞ்சலி செலுத்தியோர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தந்தையாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை (28.06.2011) காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போஷனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ் றோட்,
கோண்டாவில்.

C/789

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தனியிடத்தில் அமர்ந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி வழங்கும் சிந்தனைகள், பலம் தரக்கூடிய சிந்தனைகள், துணிவும், உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள் ஆகியவற்றினால் அறிவை நிரப்பிக்கொண்டு தியானம் செய்யுங்கள்.

-பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## இளையோர் குரலின் எதிர்பார்ப்பு!

நடந்து முடிந்தவைகளையும், இன்றைய நம் நிலையையும் வைத்து யோசித்தால், நம்மைப் 'புத்திசாலிச் சமூகம்' என்று எதை வைத்துச் சொல்லிக் கொண்டிருந்தோம் என்று வியப்பாக இருக்கிறது.

ஒரு புத்திசாலிச் சமூகம் தனது அழிவைத் தற்காத்துக் கொள்ளத் தெரியாத சமூகமாகவா இருக்கும்? அழிவிலிருந்து மீண்டெழுவதற்கும் என்ன செய்வது எனச் சிந்திக்க மாட்டாமல், அதே பழைய சிந்தனைகளையா வீர வசனங்களாக விநியோகித்துக் கொண்டிருக்கும்? கார்ல் மார்க்ஸாயிருக்க வேண்டும், இதைச் சொன்னார்: "தங்கள் பழைய வரலாற்றிலிருந்து எந்த பாடத்தையும் கற்றுக்கொள்ளாதவர்கள் மறுபடியுமொருமுறை அதே வரலாற்றையே வாழச் சபிக்கப்படுவார்கள்."

திரும்பிப் பார்த்தால், நாம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த விதத்திலேயே புத்திசாலித்தனம் இருந்திருக்கவில்லையோ என்ற சந்தேகம் இன்று ஒருவருக்கு எழாமல் போகாது. அகிம்சை வழிகளிலும் ஏனைய ஜனநாயக வழிகளையும் முழுதாக முயற்சித்துப் பார்த்து, சிங்கள அரசாங்கத்திடம் அவை இயலாது என்று கண்டபிறகே ஆயுதப் போராட்டத்தில் இறங்கினோம் என்று நாம் மனப்பூர்வமாகச் சொல்லமுடியுமா?

அகிம்சைப் போராட்ட வழிமுறைகள் பற்றியும், ஜனநாயக முறைகள் பற்றியும் நாம் சரியாக அறிந்திருந்தோமா? அல்லது இப்போதேனும் நமக்கு அவை பற்றிய சரியான விளக்கமிருக்கிறதா? அவற்றை முழுமையாகத் தெரிந்து முயற்சிக்காமல், ஆயுதப் போராட்டத்தின் பாரதூரமான பின்விளைவுகளுக்கு நாம் ஆய்வின்றிக் கண்களை மூடித் தயாரானது புத்திசாலித்தனம்தான் என்று யார் சொல்லப் போகிறார்கள்?

அந்தப் போராட்டத்தின் வழியில் நிகழ்ந்த பயங்கரவாத – பாசிஸ மயமாதல்களை கண்டுகொண்டும், விடுதலை நோக்கிப் பயணிக்கும் உற்சாகத்தில் மிதந்த சமூகத்திடம் என்ன புத்திசாலித்தனம் இருந்ததாகச் சொல்லமுடியும்?

ஏனைய சமூகங்களின் சாதாரண மக்களையும், சொந்த மக்களையும் சகோதரப் படுகொலைகளையும் செய்த போதெல்லாம் சோடா உடைத்துக் கொடுத்துக் கொண்டாடிய சமூகத்திடம் எவ்வகையான புத்திசாலித்தனம் இருந்ததாகச் சொல்வது?

சரி, 1987 ல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்த மாகாண சபையைக் குழப்பி, போர்த்தொழில் விந்தை காணும் அழிவுகளுக்கு இந்தச் சமூகம் சம்மதித்துக் கொண்டது ஏன்? பின்னர் பிரேமதாசவுடன் பேசியும் தன்னைத் தற்காத்துக்கொள்ளாமல் விட்டது ஏன்?

சந்திரிகாவின் தீர்வுப்பொதி மாகாண சபையை விடக் கூடுதல் அதிகாரங்களைத் தரச் சம்மதித்திருந்ததே! அதையும் புறங்கையால் தள்ளிவிட்டு அழிகிறேன் பந்தயம் பிடி என்று நாண்டுகொண்டு நின்றதில் வெளிப்படுத்தியது புத்திசாலித்தனத்தைத்தானா?

அவ்வளவு ஏன், இந்த சமூகத்தை வாக்குகளைப் போடும்படி உணர்ச்சிகரமாகத் தூண்டியபோதெல்லாம், போட்ட வாக்குகளின் பின் நடந்தது என்ன என்று எப்போதாவது யோசித்துப் பார்த்திருக்கிறதா?

மற்ற மற்ற தேசங்களிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் தமது தேசத்திற்கும் மக்களுக்கும் செய்த பங்களிப்புக்கும், நமது புலம்பெயர்ந்தோர் ஆடும் கூத்துகளுக்கும் உள்ள வித்தியாசத்தை இந்த சமூகம் அறியவோ உணர்ந்துகொள்ளவோ முற்பட்டிருக்கிறதா?

சிந்தித்தால் அயர்வூட்டும் சூழலில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதுதானே உண்மை? பெரியவர்களின் இதுகாலவரையான சிந்தனை விளைத்த தவறுகளிலிருந்து இளையோர் பெற்றுக்கொண்டிருக்கும் பாடம் என்ன? நாம் அதே பழைய "புத்திசாலிச் சமூகம்" தானா இல்லையா என்பதை, ஒலிக்கப்போகும் இவர்களின் புதுக்குரல்களிலிருந்துதான் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

- ஆசிரியர் -

# அபிவிருத்தி அடைந்த நாடுகளைவிடவும் இலங்கையில் ஊடகத்தணிக்கை இல்லை

## அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா



(கொழும்பு)

அபிவிருத்தி அடைந்த நாடுகளை விடவும் இலங்கையில் ஊடகத் தணிக்கை என்பதே இல்லை. இலங்கை வேகமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடு. இருந்தபோதும் ஊடக சுதந்திரம் முழுமையாக பின்பற்றப்படுவதாக சுற்றாடல் துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் 'ரெலக்ஸ்' மூலம் பெறப்பட்ட தகவல்கள் இன்றைய அதிநவீன உலகில் இணையத் தளங்கள் ஊடாகவும் தொலைக்காட்சி ஊடாகவும் சம்பவம் இடம் பெற்ற மறுகணமே பெற்றுக் கொள்ளக்கூடிய அளவில் இருப்பதாகவும் அந்தளவிற்கு ஊடகம் மிக வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுக்காக பி.எம்.ஐ.சி.எச். இல் நடைபெற்ற ஊடக பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் டபிள்யூ. பி. கனேகல மேலதிகச் செயலாளர் ஜே. டி. சி. ஜயசேன, தகவல் தொடர்பாடல் அமைச்சின் ஆலோசகர் ஆரிய ரூபசிங்க உட்படப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில், முப்பது வருடகால யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இன்று நாடு அபிவிருத்தியின் பால் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான நிலையில் இலங்கையின் முன்னேற்றத்தைக் கண்டு சகித்துக்கொள்ளாதவர்கள் சர்வதேச நாடுகளுடன் இணைந்து இலங்கையை அசௌகரியத்துக்குள்ளாக்குவது மிகவும் கவலைக்குரியது.

சனல் - 4 திரைப்படக் காட்சியானது ஒரு திரைப்படம் போன்று அதனைப் பெரிதுபடுத்தாது ஒரு படத்தை பார்ப்பது போன்று பார்த்துவிட்டு செல்வதே நல்லது. பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் 30 வருட கால யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இன்று சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றோம். ஊடகம் என்பது மிகவும் சக்தி வாய்ந்த ஒன்று. ஊடகவியலாளர்கள் இலங்கையைப் பொறுத்த வரையில் மூன்று மொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டும்.அதற்காக புதிய ஊடகக் கல்வி நிலையமொன்றை ஊடகத்துறை அமைச்சு ஆரம்பிக்கவுள்ளது.

செய்தியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளது. தற்போது அது அடிப்படை தேவையுமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மதிலுடன் மோதிய "மாருதி"

(கரணவாய்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் நெல்லியடி குஞ்சர் கடைப்பகுதியில் மாருதிக் கார் ஒன்று மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகி பலத்த சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

நேற்றுமுன்தினம் மாலை 6.00 மணியளவில் இவ்வீதியூடாக பருத்தித்துறை நோக்கி வந்துகொண்டிருந்த கார் கட்டுப்பாட்டை இழந்து வீட்டு மதிலுடன் மோதி மதிலை உடைத்துக்கொண்டு வீட்டினுள் புகுந்துள்ளது. மாருதிக்காரையும் அதனைச் செலுத்தி வந்தவரையும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (18)

# இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் சர்வதேச நீதிமன்றில் விசாரிக்கப்படலாம்

## என்கிறார் ஐ.நா. அதிகாரி கிறிஸ்ரொவ்



(கொழும்பு)

போர்க்குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள இரட்டைக் குடியுரிமை பெற்ற இலங்கையின் அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படக் கூடும் என்று சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் சித்திரவதைகள் குறித்த ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் கிறிஸ்ரொவ் ஹெய்ன்ஸ் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிட்டுள்ள கிறிஸ்ரொவ் ஹெய்ன்ஸ்,

கடந்த சில ஆண்டுகளாக உலகளாவிய அதிகாரக் கொள்கை, சில புதிய வழிகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பின் கீழ்கொண்டு வரப்படலாம்.

இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் பொது மக்கள் இலக்கு வைக்கப்பட்டதானது இதுபற்றி சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணை செய்வதற்குப் போதுமான காரணமாக உள்ளது.

லிபியா மீதான பலமான சர்வதேச தலையீடானது, இலங்கை மீதான பாரிய சர்வதேச தலையீடு பற்றிய கேள்வியை எழுப்பியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

# நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படாததால் சிரமங்களை எதிர்கொள்ளும் புங்குடுதீவு மக்கள்



(புங்குடுதீவு)

புங்குடுதீவு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1991 இல் இடம்பெற்ற இடப்பெயர்வுக்குப் பின் பெருமளவான மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில், புங்குடுதீவு வைத்தியசாலையில் நிரந்தர வைத் தியர் இல்லாமையால் பெருமளவு நோயாளர்கள் தமது தேவைக்குரிய மருந்துகளை எடுப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி வைத்தியசாலைக்கு இரவு, பகல் சேவைக்கு நிரந்தர வைத்தியர் கடமையில் இல்லாதிருப்பதனால் கர்ப்பிணித் தாய்மார், இருதய நோயாளிகள், மூட்டுவாத நோயாளர்கள் மற்றும் குழந்தைகளுக்கு நோய்கள் ஏற்படும் போது போதிய மருத்துவ வசதி இன்றி அவஸ்தைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் புங்குடுதீவில் மீளக்குடியமர்ந்த மக்களின் நன்மை கருதி, இவ் வைத்தியசாலைக்கு இரவு, பகல் சேவைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் மத்தி மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் யாழ்ரன் கல்லூரி மண்டபத்தில் தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற ஐந்து மாணவர்களையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்களையும் காணலாம். (50)

# நாம் செய்யும் நற்பணியே எம்முடன் நிலைத்திருக்கும்

## சேவை நயப்பு விழாவில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் இராஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)

நாம் செய்யும் நற்பணியே என்றும் எம்முடன் நிலைத்திருக்கும் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வலயத்தில் நடைபெற்ற சேவை நயப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பதவி இன்றிருக்கும் நாளை இன்னொருவர் கையில் மாறலாம். அல்லது அப்பதவியிருந்து வேறோர் பதவிக்கு நாம் மாறிவிடலாம். ஆனால், பதவிக் காலத்தில் எமது பொறுப்புக்களை யுணர்ந்து, கடமைகளைச் சரிவரச் செய்யும் பணியே எங்களுக்கு என்றும் பேரையும் புகழையும், மதிப்பையும் தரவல்லது. இத்தகைய சேவை நயப்பு விழாக்களில் இவைகளை மீட்டுப் பார்த்துப் பாராட்டுவதே சாலச் சிறந்தது என நான் கருதுகிறேன்.

நாம் பதவியில் இருக்கும் காலத்தில் எமது பணி உணர்வுபூர்வமாக இருக்க வேண்டும். அப்பணியினூடாக நாம் ஆத்ம திருப்தி அடையவேண்டும். அதுவே எமது பணிக்கு மேன்மை சேர்க்கும்.

இந்தக் கல்வி வலயத்திலிருந்து பதவி உயர்வு பெற்றுச் செல்பவர்களையும், இடமாற்றலாகிச் செல்பவர்களையும், ஓய்வுபெற்றுச் செல்பவர்களையும் நான் நன்கறிவேன். அவர்கள் சென்று பணியாற்றும் இடங்களில் மேலும் வளர வேண்டும் என விரும்புகின்றேன் என்றார்.

வலிகாமம் கல்வி வலயத்தில் சேவையாற்றி பதவியுயர்வு பெற்றுச் செல்பவர்களையும், இடமாற்றம் பெற்றுச் செல்பவர்களையும், ஓய்வுபெற்றுச் செல்பவர்களையும் கௌரவிக்கும் விதமாக இந்தச் சேவை நயப்புவிழா இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (06)

## மையவாடி சிரமதானம்

மன்னார் - உப்புக்குளம் மையவாடியில் சிரமதானப் பணி நடைபெற்றுள்ளது. உப்புக்குளம் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவரின் ஏற்பாட்டில் நடந்த இச்சிரமதானப் பணியில், மன்னார் நகரசபை முதல்வர், உப்புக்குளம் வை. எம்.எம்.ஏ. தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கசிப்பு வைத்திருந்தவருக்கு ஒரு இலட்சம் அபராதம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - செல்வாநகர் பகுதியில் 193 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் செலுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிபதி பெ. சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்ததுடன், இதனைக் கட்டத் தவறும் பட்சத்தில் ஆறு மாத சிறைத்தண்டனைத் தீர்ப்பும் வழங்கி உத்தரவிட்டார்.(110)

## மீள்குடியமர்வு கொடுப்பனவு வலி.வடக்கில் வழங்கப்பட்டது

(கட்டுவன்)

வலி. வடக்கில் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்ட எட்டு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 987 குடும்பங்களுக்கு 47 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக வலி. வடக்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு, குடும்பமொன்றுக்கு தலா 5 ஆயி[illegible] ரூபா வீதம் 987 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜே/222 இளவாலை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 290 குடும்பங்களுக்கும், ஜே/223 வித்தகபுரம் கிராம அலுவலர் பிரிவில் 250 குடும்பங்களுக்கும், ஜே/224 பன்னாலை கிராம அலுவலர் பிரிவில் உள்ள 19 குடும்பங்களுக்கும், ஜே/225 கொல்லங்கலட்டி கிராம அலுவலர் பிரிவிலுள்ள 129 குடும்பங்களுக்கும், ஜே/226 நகுலேஸ்வர கிராம அலுவலர் பிரிவிலுள்ள 64 குடும்பங்களுக்கும், ஜே/228 தெல்லிப்பளை கிராம அலுவலர் பிரிவிலுள்ள 154 குடும்பங்களுக்கும், ஜே/238 கட்டுவன் கிராம அலுவலர் பிரிவிலுள்ள 3 குடும்பங்களுக்கும், ஜே/243 குரும்பசிட்டி கிராம அலுவலர் பிரிவிலுள்ள 78 குடும்பங்களுக்குமே மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் மீளக்குடியமர்ந்த கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கும் இக்கொடுப்பவை வழங்குதவற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரி[illegible]கப்படுகிறது. (22)

## வடக்கில் ஆயிரம் வீடுகள்; புதிய திட்டம் அமுலாக்கம்

இடம்பெயர்ந்துள்ள வடக்கு மக்களை மீளகுடியேற்றுவதற்கென வடக்கில் 1000 வீடுகளை அமைக்கும் திட்டத்தை செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு என்பன இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வுள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக இவ் வீட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. ஒரு வீட்டினை அமைப்பதற்கு மூன்று இலட்சம் ரூபா செலவாகு மென கணிப்பிடப்பட்டுள்ளதாகவும், இதில் இரண்டு இலட்சம் ரூபாவை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும், ஒரு இலட்சம் ரூபாவை மீள்குடியேற்ற அமைச்சும் வழங்கவுள்ளன. இதன் முதல் கட்டப் பணிகள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதோடு, ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 50 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

## வாழ்வாதார உதவிகள் போதாது; கவலையில் தோப்புக்காடு மக்கள்

(யாழ். நிருபர்)

காரைநகர் - தோப்புக்காட்டுப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான அடிப்படை உதவிகள் முழுமையாகக் கிடைக்கவில்லை என்றும் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எமது வீடுகளுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். தோப்புக்காடு கடற்கரை வீதியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். குழாய்நீர் மூலம் எமது பிரதேசத்துக்கு குடிநீர் விநியோகத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மக்கள் மீளக்குடியமராத காணிகளை சுத்தப்படுத்தி நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவக் கிராமமான எமது கிராமத்தில் கடற்றொழில் செய்பவர்களுக்குத் தேவையான வலைகள், வள்ளங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை மானிய விலையிலும், கடன் அடிப்படையிலும் கொள்வனவு செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (10)

## சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் வீடமைப்பு நிதியுதவி பெறுவோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

(இணுவில்)

வடக்கு-கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 345 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான நிதி உதவி கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது. மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இவ்வீட்டமைப்புத் திட்டத்தின் கீழ் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் விபரம் வருமாறு:

ஜே/177 சித்தன்கேணி

காசிப்பிள்ளை வரதராசா, வேலுப்பிள்ளை குணரத்தினம், நாச்சிமுத்து பெருமாள், கனகரத்தினம் தையல்நாயகி, எம். குணரத்தினம், சின்னத்தம்பி தம்பு, ஏகாம்பரம் தேவகடாட்சம், கே. சண்முகநாதன், தம்பையா சிவநேசன், எஸ். இராசகோபால், அப்புத்துரை சின்னத்துரை.

ஜே/178 இங்கிலாக்கை

அ. பத்திநாதன், கணபதி சந்திரசேகரம், நல்லதம்பி வரதராசா, கைலாயபிள்ளை விக்னேஸ்வரன், சங்கர் லூட்சொருபினா, இராசலிங்கம் கண்ணதாசன், துரைசிங்கம் மோகனதாஸ், தியாகராசா ஞானேந்திரன், மரியதாஸ் பிரான்சிஸ், மாணிக்கம் மௌனகீதன், இராசதுரை கடாச்சரம், ரி. சுகந்தன், முத்தன் நமசிவம், தியாகராசா ஜனிகாந், கந்தையன் முருகன், செல்வகுமார் உதயரூபி, நடராசா செல்வரட்ணம், முத்தன் செல்லத்துரை, விக்னேஸ்வரன் சிவாஜினி, சுபசீலன் சுகன்யா, கந்தையா நாதன், விஸ்வலிங்கம் பத்மராசா, முருகேசு கிருபையானந்தன், நாகமணி பஞ்சரட்ணம், கந்தசாமி பரமானந்தன், கந்தசாமி பாலகுமார், பரம்சோதி சிவகுமார்.

ஜே/178 கப்பன்டா

துரைராசா செல்வேந்திரராசா, யேசுதாசன் சுதர்சினி, அப்பாப்பிள்ளை அசோக்குமார், நல்லையா குணசேகரம், நடராசா பஞ்சநாதன், மாணிக்கம் சிவபாதம், கந்தையா கிருஷ்ணகுமார், பண்டாரி வைத்திலிங்கம், அன்ரன் அற்புதராசா, அன்ரனி டெனிசியா, வைரமுத்து தெய்வேந்தின், கிருஷ்ணன் தேவேந்திரன், இராசையா இராசகுமார், முத்தையா அருமைத்துரை, குமாரு கணேசரத்தினம், கிருஷ்ணபாலன் சசிகரன், வைரமுத்து நேரு, சிறிகாந்தராசா புவனேஸ்வரி, செல்வராசா சந்திரமோகன், மாணிக்கம் பாலச்சந்திரன், ஜயாத்துரை சறோஜாதேவி, நரசிங்கம் சாம்பசிவம், திருஞானசம்பந்தர் லலிதாவதி, புவனேஸ்வரன் சசிகுமாரி, பொன்னன் சின்னத்தம்பி.

ஜே/179 நிற்சாமம்

சிவக்கொழுந்து தமிழ்ச்செல்வம், கதிரன் சுப்பிரமணியம், குட்டியன் இராசலிங்கம், சின்னத்துரை கணேஸ்வரன், சுப்பிரமணியம் சுரேஸ்குமார், நவரத்தினம் சுரேஸ்குமார், செல்வரட்ணம் வரதராசா, கிருஷ்ணர் சிறிகாந்தன், வல்லி துரைசாமி, நாகேந்திரம் குணராசா, தம்பிமுத்து தவச்செல்வன், முருகேசு பாலசிங்கம், வெற்றி குணசேகரம், நடேசன் சந்திரகுமார், றொபின்சன் சோபா, வெற்றியன் இராசரத்தினம், பெரியான் முருகன், சுந்தரலிங்கம் புவனகுமார், காசி தருமு, சின்னத்தம்பி சிறிதரன், மார்க்கண்டு தங்கராசா, நாகமணி தயாகரன், சிவபாதம் நிர்மலதாஸ், சிவபாதம் பரமேஸ்வரி, சந்திரயோ விஜயானந், செல்லக்கண்டு கணேசலிங்கம், இராசரத்தினம் கமலா, சிதம்பரம் இராசரத்தினம், தங்கராசா சிவம், யோகரத்தினம் அன்னம்மா, யோகரத்தினம் தவேந்திரன், அருளப்பு பிற்றிறோ, சின்னராசா மகாலட்சுமி, கணபதி இராசதுரை, தம்பி ஐயாதுரைராசா, செல்லத்துரை சிறிஸ்காந்தராசா, நடராசா சந்திரகுமார். (தொடரும்)

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு பாரபட்சமின்றி உலர் உணவு விநியோகிக்கப்பட்டுள்ளது

## அரச அதிபர் தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உலர் உணவு விநியோகம் பாரபட்சமின்றி வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கும், இடம்பெயர்ந்த மக்களுக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுமதியுடன் உலக உணவுத் திட்டத்தின் கீழும் மீள்குடியேற்ற அமைச்சின் அனுமதியுடனும் உலர் உணவு விநியோகம் வழங்கப்பட்டு வருகின்ற நடைமுறைமை பின்பற்றப்பட்டு வருகின்றது.

இதேவேளை, 12638 குடும்பங்களுக்கு உலர் உணவு விநியோகம் தொடர்ந்து வழங்க மீள்குடியேற்ற அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டது.

அக்கோரிக்கையில் முஸ்லிம் மக்களில் 1378 குடும்பங்களைச் சேர்ந்த 5974 அங்கத்தவர்களுக்கு அமைச்சின் அங்கீகாரத்திற்கமைய உலக உணவுத்திட்டத்தின் கீழ் உலர் உணவு விநியோகிக்கப்பட்டது. உலர் உணவு, அமைச்சின் உரிய நடைமுறைகளுக்கு அமைய எந்தவித பாராபட்சமின்றி அனைத்து மக்களுக்கும் மாவட்ட செயலகத்தினால் அனுமதி கிடைகக்கும் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றதேயொழிய எதுவித தனிப்பட்டவர்களது செல்வாக்கினால் அல்ல எனவும் தெரிவித்தார். மீளக்குடியேறிய மக்களுக்கான உலா உணவு விநியோகம் தொடர்பாக ஒலிபரப்பாகிய செய்தி குறித்து அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இத்தகவல்களை வெளியிட்டார்.

# கிறவல் வீதிப் புழுதியினால் பல்வேறு தரப்பினரும் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் துரிதகதியில் அமைக்கப்பட்டு வரும் கிறவல் வீதிகளிலிருந்து வெளிக்கிளம்பும் புழுதியினால் மக்கள் பெரும் சிரமத்திற்கு முகம்கொடுத்துள்ளனர்.

ஜனாதிபதியின் விசேட திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 100 வீதிகள் துரிதமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. இந்த வீதிகளில் ஒருசிலவற்றுக்கே தார் போடப்படுகின்றன. ஏனைய வீதிகள் அனைத்தும் கிறவல் வீதிகளாகவே அமைக்கப்படுகிறது.

இந்த கிறவல் வீதிகள் அமைக்கப்படுவதால் வீதி அருகிலுள்ள வீடுகள், கடைகள், பணிமனைகள் அனைத்திலும் புழுதி படிந்து காணப்படுகின்றன. இதனால் பெரும் சுகாதாரப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் அபாயம் உருவாகியுள்ளது.

# வேளாண்மையில் ஆர்வம் காட்டும் மீளக்குடியேறிய வன்னி மக்கள்

(மாங்குளம்)

மீள்குடியேற்றங்கள் துரித கதியில் இடம்பெற்று வருகின்ற கிளிநொச்சி, மாங்குளம், கனகராயன்குளம், கரிப்பட்டமுறிப்பு, ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, முத்தையன்கட்டு என்பவற்றினை உள்ளடக்கிய வன்னிப் பகுதி மக்கள் வேளாண்மை செய்கையில் துரித கதியில் ஈடுபட்டு வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

இப்பகுதியினை அண்டிய குளங்களிலிருந்து வேளாண்மைக்கு நீர் வழங்கப்பட்டு வருகின்றமையால் சிறுபோக நெல் வேளாண்மை மிகவும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் கச்சான், சிறுதானியங்கள் போன்றவையும் அதிக விளைச்சலினைக் கொடுத்துள்ளது.

எனவே, இப்பகுதி மக்கள் மேலும் நிலங்களினை வளப்படுத்தி வருகின்றனர். வளம்படுத்தும் நிலங்கள் பற்றாக் காடுகளாக காணப்பட்டமையினால், அவற்றினை வெட்டி அழித்துத் துப்புரவு செய்து நிலத்துக்குத் தீ மூட்டி வருகின்றனர். இதனால் இப்பகுதி நிலங்கள் எரிந்து கறுப்பு நிலங்களாக காணப்படுகின்றமையுடன், இவை உழவு இயந்திரங்கள் மூலம் சீர் செய்யப்பட்டுப் பதப்படுத்தப்படுவதினையும் காண முடிகின்றது.

அத்துடன் இப்பகுதிகளில் தொண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் மரவள்ளிப் பயிர்களைப் பயிரிடுவதிலும் இபபகுதி மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். (42)

# துணுக்காய் பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நிலவி வந்த தளபாடப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவையான தளபாடங்கள் துணுக்காய் கல்வி வலயத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பாடசாலைக்குத் தேவையான ஒரு தொகுதி தளபாடங்கள் கடந்த வாரம் வழங்கப்பட்டன. எனினும் போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக சில பாடசாலைகள் இத்தளபாடங்களினைப் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரியவருகின்றது.

இப்பாடசாலைகள் தமக்குரிய தளபாடங்களை உடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு துணுக்காய் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு அறிவித்துள்ளார். (42)

# பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை ஊக்குவித்தால் அவர்கள் மேலும் வளர்வதற்கு உந்து சக்தியாக அமையும்

## காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் தெரிவிப்பு

(காரைநகர்)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை உட்பட சாதாரண தரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடையும் மாணவர்களைக் கௌரவித்து ஊக்கமளிக்கும் செயற்பாடு அவர்களை மேலும் வளர்க்க உந்து சக்தியாக அமையும் என காரைநகா உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை ஊக்கமளித்து கௌரவிக்கும் நிகழ்வு காரைநகர் மத்தி மேம்பாட்டுக்கழகத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குக் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்-

தரம் 5 பரீட்சையில் தோற்றி அதில் முதல் மாணவனாகச் சித்தியடைந்து சாதனை படைத்ததை இப்போதும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். நான் இன்று இந்த நிலைக்கு உயர்வதற்கு இதுவே அடிப்படை உந்து சக்தியாக அமைந்தது. தற்போது தரம் 5 வினாத்தாள்களுக்கு விடைகளும் திறனை மாணவர்களுக்கு வளர்ப்பதற்காக பெற்றோரும் தம்மை கல்விச் செயற்பாடுகளில் தீவிரப்படுத்திக் கொள்கின்றனர்.

தரம் 5 புலப்மைப்பரிசில் பரீட்சை, க. பொ.த சாதாரண தரப்பரீட்சை, க.பொ. த.உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடையும் மாணவர்களைக் கௌரவப்படுத்த அந்தப் பகுதியிலுள்ள கழக அமைபபுக்கள் முன்வரவேண்டும். இது மாணவர்களை மேலும் வளர்ச்சியடையச் செய்யும் என்றார்.

காரைநகர் மத்தி மேம்பாட்டுக் கழகத் தலைவர் தமது தலைமை உரையில்-

இக்கழகம் 2004ஆம் ஆண்டு அப் பகுதி மாணவர்களை மட்டும் கௌரவிக்க ஆரம்பிக்கப்பட்டதாகவும், பின்னர் வளர்ச்சியடைந்து 2006ஆம் ஆண்டு முதல் காரைநகர்ப் பிரதேசப் பாடசாலைகளில் சித்தியடையும் சகல மாணவர்களையும் கௌரவித்து ஊக்குவித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வைத்து சித்தியடைந்த 5 மாணவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட புத்தகங்களும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 48 மாணவர்களுக்கும் பரிசுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (50)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(27.06.2011 – திங்கட்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம் ஆனி 12 ஆம் நாள்.

நட்சத்திரம் : பரணி மு.இ. 7.48 வரை, திதி : ஏகாதசி பி.ப. 12.57 வரை, ஏகாதசி விரதம்

ராகுகாலம் : 7.25 – 8.55, சுபநேரம் : 11.55 – 1.25

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணக்கஷ்டம், காரியத்தடை, வாக்குவாதம், வீண்அலைச்சல், மனப்பயம்.

**ரிஷபம்:–** பணக்கஷ்டம், காரிய அனுகூலம், உடல்நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு, மனக்கவலை.

**மிதுனம் :–** பணவரவு, கடன் வசூல், வீண் கற்பனை, வாக்குவாதம், தேக ஆரோக்கியம்.

**கடகம்:–** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மனச்சந்தோசம், கடன்வசூல், தியாகம்.

**சிம்மம்:–** பணக்கஷ்டம், உடல்நலக் குறைவு, மூத்தோர் ஆசி, வீண் சிரமம், மனமகிழ்ச்சி

**கன்னி :–** பணவரவு, தேகஆரோக்கியம், உறவினர் விரோதம், பொருள் இழப்பு, மனக் கவலை.

**துலாம் :–** குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், நண்பர் தொல்லை, கடவுள் வணக்கம், மனமகிழ்ச்சி.

**விருச்சிகம்:–** ஆலய வழிபாடு, விருந்தினர் வருகை, பிரயாண நன்மை, தேக ஆரோக்கியம், கடன்வசூல்.

**தனுசு:–** பணவரவு, தேக ஆரோக்கியம், மூத்தோர் ஆசி, தொழில் விருத்தி, தூக்கம்.

**மகரம்:–** பணக் கஷ்டம், உடம்பு சுகக் குறைவு, மனச்சஞ்சலம், உறவினர் விரோதம், கவலை.

**கும்பம் :–** பணவரவு, தேக ஆரோக்கியம், விருந்தினர் வருகை, சுபகாரியம், பெரியோர் ஆசி.

**மீனம்:–** பணக்கஷ்டம், வீண் அலைச்சல், மருத்துவச் செலவு, மனக்கவலை, பொருள் இழப்பு.

# உடுவை.தில்லை நடராஜாவின் சேவை நீதிவழி நிலைக்க வாழ்த்துகின்றோம்

## புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிலையத் தலைவர்

(குருநகர்)

அரச பொதுச்சேவை ஆணைக்குழு அங்கத்தவராக ஜனாதிபதியால் அண்மையில் உடுவை. எஸ்.தில்லைநடராஜா நியமிக்கப்பட்டமையைக் கௌரவித்து அவரை அப்பதவியில் நிலைத்து நீதிவழி நின்று சேவையாற்றி மேலும் அவர் புகழோங்க வாழ்ததுகின்றோம்.

இவ்வாறு புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிலையத் தலைவர் ஆர்.எவ்.நாகலிங்கம் தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட இலங்கையின் பல பாகங்களிலும் பொறுப்பு வாய்ந்த அரச உயர் பதவிகளை இவர் வகித்துள்ளார்.

குறிப்பாக போர்க்காலத்தில வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் அரச அதிபராகவும், பின்பு கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராகவும் சேவையாற்றியதுடன், எழுத்துப்பணி மற்றும் நாடகம், பேச்சுத் துறைகளில் வித்திட்டமையையும் மேலாகக் கொண்டு அவரைக் கௌரவிக்கின்றோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (68)

# ஒருவாரத்தில் இருவரை கடித்துக் குதறிய நாய்

(கரணவாய்)

நெல்லியடியில் நாய் ஒன்று ஒரு வாரத்தில் இரண்டு பேரைக் கடித்துக் குதறியுள்ளது. இவர்கள் இருவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கலலடியார் முடக்கு வீதி, கலட்டி சந்திக்கு இடைலேயே வீதியால் சென்றவர்களை நாயொன்று கடித்துக் குதறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

# வைத்திய கலாநிதி ரதனிக்கு பிரியாவிடை நிகழ்வு

(மன்னார்)



மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடந்த 22 வருடகாலமாக கடமையாற்றி வந்த வைத்திய கலாநிதி ரதனி யூட் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பளராக பதவி உயர்வு பெற்றுச் செல்கிறார்.

இந்த நிலையில், அவருக்கான பிரியாவிடை நிகழ்வொன்று மன்னார் வைத்தியசாலை தரப்பினரின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது. இதன்போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் முஹமத் அசாத் வைத்திய கலாநிதி ரதனி யூட்டுக்கு ஞாபகார்த்த சின்னமொன்றை வழங்கி வைத்தார்.

# 13 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்டப் போட்டி இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய அணிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலை அணிகளின் 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு இளவாலை ஹென்றியரசர், சென் பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, குளமன்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் தகுதிபெற்றுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஒழுங்கமைப்புடன் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் இப்போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது.

ஆண், பெண்களுக்கிடையில் இடம்பெற்ற இப்போட்டி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் அரையிறுதிப் போட்டிகள் இடம்பெற்றது.

ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் மோதின. இதில் ஹென்றியரசர் கல்லூரி அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

பெண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும், கிளிநொச்சி சிவானந்தா ம.வி.யும் மோதின. இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் குளமன்காடு றோமன் கத்தோலிக்க அணியும், கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் குளமன்காடு றோமன் கத்தோலிக்க அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இந்த இறுதிப் போட்டி எதிர்வரும் புதன்கிழமை துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறுமென போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவளை, இப்போட்டிக்கு சமபோஷா நிறுவனம் அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

# அணிகளுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

மாதகல் சென் ஜோசப் மகாவித்தியலயத்தின் விளையாட்டு அணிகளுக்கான நிதியுதவிகளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்) வழங்கினார்.

யாழ். மாவட்ட பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தையும், ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் (19 வயதுப் பிரிவு) மூன்றாமிடத்தையும் பெற்ற யாழ். மாதகல் ஜோசப் மகாவித்தியாலய அணிகள் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான பயண மற்றும் இதர தேவைகளுக்கான செலவுகளுக்குரிய நிதி உதவியினையும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியரிடம் வழங்கினார்.

இவ்வாறான உதவிகள் தொடர்ந்து கிடைக்கும் பட்சத்தில் வீரர்களிடையே மேலும் வரவேண்டும் எண்ணம் தோன்றும் என பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

# பிரிசங்கரின் அபாரமான துடுப்பாட்டம் 176 ஓட்டங்களால் சென்ஜோன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

பிரிசங்கரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் குருத்தலாவள சென் தோமஸ் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி 176 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

15 வயதுப் பிரிவு அணியினருக்கிடையில் நடைபெற்ற இப்போட்டி கடந்த 18ஆம் திகதி குருத்தலாவள சென் தோமஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

சென் தோமஸ் கல்லூரி அணியின் பிரிவு இரண்டின் 15 வயதுப் பிரிவும், சென் ஜோன்ஸ் கல்லூரியின் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவும் 50 ஓவர்கள் கொண்ட போட்டியில் மோதின.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் ஜோன்ஸ் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்து. இதற்கமைய ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி பிரிசங்கரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களை எடுத்தது. இதில் பிரிசங்கர் 14 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 90 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கபில்ராஜ் 50, அஜித் 30 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் வசீல் மூன்று, தருது இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய சென் தோமஸ் அணி 27.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கேசன் 36, மிலக 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கமின் மூன்று, சிந்தியன், கிருசாந்தியன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# பிரதேச செயலக மட்டப் போட்டியில் சிறந்த வீரர்களாகத் தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடத்தப்பட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளில் சிறந்த வீர, வீராங்கனைகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கால்பந்தாட்டத்தில் சிறந்த வீரராக சி.மன்மதன் (கரவெட்டி பிரதேச செயலகம்) சிறந்த வீராங்கனையாக எ.நிதர்சினி (பருத்தித்துறை பிரதேச செயலகம்)

கபடியில் சிறந்த வீரராக றீகன் பெர்ணான்டோ (பருத்தித்துறை பிரதேச செயலகம்) சிறந்த வீராங்கனையாக கணசீலன் பெனசிகா (சாவகச்சேரி பிரதேச செயலகம்)

கரப்பந்தாட்டத்தில் சிறந்த வீரராக வசம்பு சிவசொரூபன் (கோப்பாய் பிரதேச செயலகம்) சிறந்த வீராங்கனையாக பாலசுப்பிரமணியம் கலாஜினி (தெல்லிப்பளை பிரதேச செயலகம்)

கிரிக்கெட்டில் சிறந்த வீரராக எ.ஜனார்த்தனன் (நல்லூர் பிரதேச செயலகம்) சிறந்த வீராங்கனையாக பாலச்சந்திரன் ரஜிதா (சங்கானை




பிரதேச செயலகம்)

எல்லே போட்டியில் சிறந்த வீரராக எஸ்.கிசோக்காந் (தெல்லிப்பளை பிரதேச செயலகம்) சிறந்த வீராங்கனையாக எம்.வசந்தினி (மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு)

வலைப்பந்தாட்டத்தில் சிறந்த வீராங்கனையாக ஆர்.மோகனா (தெல்லிப்பளை பிரதேச செய்லகம்)

கூடைப்பந்தாட்டத்தில் சிறந்த வீரராக என்.திவாகர் (நல்லூர் பிரதேச செயலகம்) சிறந்த வீராங்கனையாக எஸ்.சோபனா (யாழ்ப்பாணப் பிரதேச செயலகம்)

பூப்பந்தாட்டத்தில் சிறந்த வீரராக எல்.றெமேடியஸ்றெமின்ரன் (உடுவில் பிரதேச செயலகம்) சிறந்த வீராங்கனையாக சந்திரராசா பிறின்சிலா (உடுவில் பிரதேச செயலகம்)

மேசைப்பந்தாட்டத்தில் சிறந்த வீரராக சண்முகம் சாமுவேல் (யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்) சிறந்த வீராங்கனையாக எஸ்.சிந்துஜா (தெல்லிப்பளை பிரதேச செயலகம்)

ஹொக்கியில் சிறந்த வீரராக கே.அனுசியன் (தெல்லிப்பளை பிரதேச செயலகம்) சிறந்த வீராங்கனையாக எஸ்.கிருத்திகா (உடுவில் பிரதேச செயலகம்)

# 128 ஓட்டங்களால் கொக்குவில் இந்து வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் 128 ஓட்டங்களால் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட சிநேகபூர்வ போட்டி கடந்த 23ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்து. இதற்கமைய களமிறங்கிய இந்துக் கல்லூரி அணி 45.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 190 ஓட்டங்களை எடுத்தது. இதில் லதுசன் 33, ஒனசிஸ் 22, கோமோதரன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சருஜன் மூன்று, நிரோஜன், சஜிதன், விதுர்ஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய மத்திய கல்லூரி அணி 23.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சஜிதர், துசியந்தன் தலா 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுசன் ஐந்து, மிதுசன், நிதுசன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# 21 வயதுக் கால்பந்தாட்டம் ஸ்பெயின் அணி சம்பியன்

(ஆர்கஸ்)

யுபா ஐரோப்பிய சம்பியன் ஷிப் போட்டிக்கான 21 வயதுக்கு உட்பட்ட கால்பந்து போட்டியில் ஸ்பெயின் அணி சம்பியனானது.

நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் சுவிட்சர்லாந்து அணியை 2-1 கோல் கணக்கில் வீழ்த்தியது. டென்மார்க் ஆர்கஸ் நகரில் நடந்த இறுதி ஆட்டத்தில் 41ஆவது நிமிடத்தில் ஆண்டர் ஹெரிரா ஸ்பெயின் அணிக்கு முன்னணி பெற்று தந்தார்.

ஸ்பெயின் அணியின் 2ஆவது கோல் 81ஆவது நிமிடத்தில் கிடைத்தது. இந்த 2 கோல்களால் ஸ்பெயின் அணியின் வெற்றி உறுதி படுத்தப்பட்டது. ஆட்டத்தின் 2ஆவது பாதியில் இளம் ஸ்பெயின் வீர்கள் கட்டுப்பாட்டிலேயே ஆட்டம் இருந்தது. அவர்கள் சுவிஸ் வீரர்களை மிக அரிதாகவே கோல் எல்லைப் பகுதிக்கு பந்தை எடுத்துச் செல்ல அனுமதித்தார்கள்.

ஸ்பெயின் அணியின் 2ஆவது கோல் சுவிஸ் அணியை அதிரச் செய்தது. ப்றீகிக் வாய்ப்பில் 45 மீற்றர் தொலைவில் இருந்து ஸ்பெயின் வீரர் தியாகோ அல்கான்ட்ரா அற்புதமான கோல் அடித்தார். அந்தப் பந்தை ஸ்விஸ் கோல் கீப்பர் தடுக்க எடுத்த முயற்சிகள் உரிய பலனை அளிக்கவில்லை.

இறுதி ஆட்டதில் வலிமை மிக்க அணியான சுவிஸ் கருதப்பட்ட போதும், ஸ்பெயின் வீரர் ஆண்டர் ஹரிரா அடித்த கோல் ரசிகர்களுக்கு மட்டுமல்ல, வீரர்களுக்கும் பிரமிப்பை ஏற்படுத்தியது. ஸ்பெயின் அணி இந்த வெற்றி மூலம் தனது 3ஆவது சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இதற்கு முன்னர் உலக மற்றும் ஐரோப்பிய சம்பியன் பட்டங்களை வென்றும் இருந்தது.



## இரண்டாவது டெஸ்டிலும் கிறிஸ் கெய்ல் இல்லை

(கிங்ஸ்டன்)

இந்திய அணியுடனான இரண்டாவது போட்டிக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணியில் கிறிஸ் கெயல் சேர்க்கப்படவில்லை. இரண் டாவது டெஸ்ட் போட்டிக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதிரடி வீரர் கிறிஸ்கெய்லுக்கு வாய்ப்பு கொடுக் கப்படவில்லை. அவர் தொடர்ந்து அணியில் இருந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறார். வீரர் களின் ஒப்பந்தம் உட்பட பல்வேறு பிரச்சினை கள் தொடர்பாக கிரிக்கெட் சபையை கெய்ல் கடுமையாக விமர்சித்தார். இதனால் பாகிஸ்தான் தொடரில் நீக்கப்பட்டார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியில் ஒரே ஒரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முதல் டெஸ்டில் மோசமாக விளையாடிய துணைத் தலைவர் பிரெண்டன் நாஷ் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக் எட்வர்ட்ஸ் அணிக்கு அழைக்கப் பட்டுள்ளார். ஆனாலும் 11 பேர் கொண்ட அணியில் எட் வர்ட்ஸ் இடம் பெறுவது சந் தேகம். 2ஆவது டெஸ்ட் போட்டிக்கான மேற்கிந் தியத்தீவு அணி வீரர்கள் வருமாறு:-

டரன் சமி (கேப்டன்), அட்ரியன் பரத், லெண்டில் சிம்மன்ஸ், டாரன் பிராவோ, சர்வான், சந்தர்பால், சாமுவேல்ஸ், கால்டன் பவ் (விக்கெட் கீப்பர்) பிடல் எட்வர்ட்ஸ், ராம்பால், தேவேந்திர பிசோ, ரோச், கிரிக் எட்வர்ட்ஸ்.

## இந்தோனேஷிய பட்மின்ரன் இறுதிப் போட்டியில் சாய்னா



(ஜகர்த்தா)

இந்தோனேஷிய பட்மின்ரன் போட்டியில் நடப்பு சம்பியனான இந்தியாவின் சாய்னா நேவால் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார். இந்தோனேஷிய ஓபன் சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் போட்டி ஜகர்த்தா நகரில் நடந்து வருகிறது. இதில் பங்கேற் றுள்ள இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் தொடர்ந்து அசத்தி வருகிறார். அரையிறுதி யில் அவர் சீனத் தைபேயின் ஷாவோ சீயா செங்குடன் மோதினார். 3 செட் வரை நீடித்த பரபரப்பான ஆட்டத்தில் சாய்னா நேவால் 21-14, 14-21, 21-17 என்ற செட் கணக்கில் செங்கை தோற்கடித்து தொடர்ந்து 3ஆவது முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

வெற்றிக்கு பிறகு 21 வயதான சாய்னா கூறுகையில், பல போட்டிகளில் செங் விளையாடுவதை பார்த்து இருக்கிறேன். அவர் திறமையான வீராங் கனை. கடின உழைப்பாளி. களத்தில் மிகவும் வேகமாக செயல்படக் கூடியவர். அதனால் அவருக்கு நான் வலுமிகுந்த நேர்த்தியான ஷாட்களை அடிக்க வேண்டி இருந்தது. இல்லாவிட்டால் அவர் எந்த இடத்தில் இருந்தும் பந்தை மீட்டு திருப்பி விடுவார். இது ஒரு சிறந்த வெற்றி. சிங்கப்பூர் போட்டியில், நான் செய்த தவறுகளால் அவரிடம் போராடி தோல்வி அடைந்தேன். இதனால் மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளானேன். இப்போது அவரை தோற்கடித்து இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அவர் சிறப்பாக விளையாடினார். அது என்னை மேலும் சிறப்பாக செயல்படத் தூண்டுதலாக இருந்தது என்றார்.

## விட்டோரி தற்காலிக ஓய்வு

(ஹமில்டன்)

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டேனியல் விட்டோரி சர்வதேச ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டியில் இருந்து தற் காலிக ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். எனது உடல்நிலையை நல்ல யாக தக்க வைத்துக் கொள்ளவும், நியூசிலாந்து டெஸ்ட் அணியில் தொடர்ந்து விளையாட வேண்டும் என்பதற்காகவும், ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டியில் இருந்து தற்காலிக ஓய்வு முடிவை எடுத்துள்ளேன். இந்த ஓய்வு இடைவெளி ஓரிரு ஆண்டுகளுக்கு பின்னர் நியூசிலாந்து ஒரு நாள் அணியில் மீண்டும் நான் இடம் பிடிக்க நல்ல வாய்ப்பாக அமையும் என்று நம்புகிறேன். நான் எதிர்பார்ப்பது போல் எல்லாம் நல்லபடியாக அமைந் தால் 2015ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணப் போட்டிக்கான நியூசிலாந்து அணியில் இடம் பிடிக்க முடியும் என்று விட்டோரி கூறியுள்ளார்.

## ஒரு நாள் போட்டி நாளை ஆரம்பம்

(லண்டன்)

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக் கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் நாளை ஆரம் பமாகின்றது.

இப்போட்டியின் முதல் போட்டியுடன் இலங்கை அணியின் நட்சத்திரத் துடுப் பாட்ட வீரர் சனத் ஓய்வு பெறுகின்றார். இதன் காரணமாக இப்போட்டி முக்கியத் துவம் வாய்ந்ததாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## திரும்பிச் சென்றுள்ள டோனியின் காசோலை

(மும்பை)

அதிகம் உழைக்கும் கிரிக்கெட் வீரர் எனக் கருதப்படும் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனியின் வங்கிக் கணக்கில் ரூ.645 இல்லாத காரணத்தினால் அவர் கொடுத்த காசோலை ஒன்று திரும்பிச் சென்றுள்ளது.

மார்ச் 15, 2011 என்று திகதியிடப்பட்ட அந்தக் காசோலையை ரூ.645ற்கு டோனி ராஞ்சி நகராட்சிக்கு வீட்டு வரிக்காகக் கொடுத் துள்ளார்.

டோனியின் வங்கிக் கணக்கில் ரூ.645 இல்லாத காரணத்தில் அந்த காசோலை திரும்பிச் சென்றுள்ளது.

ஆனாலும் காசோலை திரும்பியதற்கு டோனியின் மீது நடவடிக்கை எடுக்கப்படமாட் டாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏனெனில் அவர் ரூ.1கோடி வருமான வரி செலுத்துபவர், மேலும் அந்த மாநிலத்தில் அதிக வருமான வரி செலுத்துபவரும் டோனியே என்பதால் காசோலை திரும்பியதற்கு நட வடிக்கை எடுக்கப்படமாட்டாது எனக் கூறியுள்ளனர் நகராட்சி அதி காரிகள்.

## ஷாருக்கானுடனான நட்பு தொடர்ந்துமுள்ளது

(கொல்கத்தா)

ஷாருக்கான் எனது மூத்த சகோதரரைப் போன்றவர். அவருடனான எனது நட்பு தொடர்ந்து இருந்து வருகிறது என கங்குலி தெரிவித்தார்.

கங்குலியை கொல்கத்தா அணியில் சேர்க்காததால் அவரது ரசிகர்கள் ஷாருக்கான் மீது ஆத்திரம் அடைந்து அவருக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள். இது தொடர்பாக ஷாருக்கானுடன் கங்குலி கருத்து வேறு பாடுடன் இருந்து வந்ததாக கூறப்பட்டது. இதை கங்குலி மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது: ஷாருக்கா னுடன் எனக்கு எந்தவித மோதலும் இல்லை. எங்களுக்குள் மோதல் இருப்பதாக தவறான தகவல்கள் எங்கிருந்து வருகிறது என்பது எனக்கு தெரியவில்லை. இது முற்றிலும் தவறானது. இதுவொரு வதந்தியே. ஷாருக்கான் எனது மூத்த சகோதரரைப் போன்றவர். அவருடனான எனது நட்பு தொடர்ந்து இருந்து வருகிறது.

நாங்கள் இருவரும் நீண்ட காலமாகவே நட்பாக பழகி வருகின்றோம். இது எந்தக் காலமும் தொடர்ந்தும் பேணப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சச்சின்தான் சிறந்தவராம் கூறுகிறார் உசைன் போல்ட்

நான் பார்த்த கிரிக்கெட் வீரர்களில், என்னைப் பொறுத்தவரை யில் சச்சின் தான் சிறந்த வீரர். கிரிக்கெட்டில் பல சாதனைகள் படைத்துள்ள இவர், களத்தில் கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்துவார். இவரது விளையாட்டை நேரில் காணும் நாளை எதிர்பார்த்து காத்திருக்கின்றேன். இவ்வாறு உலக தடகள வீரர் உசேன்போல்ட் தெரிவித்தார். சச்சின் ஜமைக்காவில் விளையாடி இருந்தால் நன்றாக இருந திருக்கும். இதேபோல, டோனியும் சிறந்த வீரர். இவரும் களத்தில் போராடுவதில் வல்லவர். இவரது ஆட்டத்தையும் காணவேண்டும். கிறிஸ் கெய்லை இதுவரை நேரில் சந்தித்தது இல்லை. எனது விருப்பமான வீரரான இவர். அணிக்காக மீண்டும் விளையாட வேண்டும் என்று விரும்புகின்றேன். இந்தியாவில் எனக்காக அதிக ரசிகர்கள் இருப்பதாக கேள்விப்பட்டேன். எனக்கு ஆதர வளித்து வரும் இவர்களுக்கு நன்றி. கொமன்வெல்த் போட்டியில் பங்கேற்காத நான், எப்படியும் இந்தியா வருவேன் என்று நம்புகிறேன் எனவும் தெரிவித்தார்.



லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரை நேரில் சென்று இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் அவரது மனைவியுடன் பார்ப்பதைக் காணலாம்.

## நான்காவது சுற்றில் நடால், வொஸ்னியாக்கி



(லண்டன்)

லண்டனில் நடைபெற்று வரும் விம்பிள்டன் தொடரின் நான் காவது சுற்றுக்கு நடால், வோஸ்னியாக்கி ஆகியோர் முன்னேறி யுள்ளனர்.

ஆண்கள் பிரிவில் ஸ்பெயினின் ரபெல் நடால் 7-6, 7-6, 6-0 என்ற நேர் செட்டில் லக்ஸம்பர்க்கை சேர்ந்த வைல்டு கார்டு வீரர் ஜிலெஸ் முல்லரை தோற்கடித்து 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்கள் பிரிவில் முதல் நிலை வீராங்கனை டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி 6-3, 6-2 என்ற நேர் செட்டில் அவுஸ் ரேலியாவின் ஜார்மிலா காஜ்டோசோவாவை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். அடுத்து அவர் சுலோவக்கியாவின் சிபுல்கோவாவை சந்திக்கிறார். விம்பிள்டனில் 5ஆவது ஆண்டாக பங்கேற்று வரும் வோஸ்னியாக்கி இதுவரை கால்இறுதி வாய்ப்பை எட்டியதில்லை என்பது குறிப் பிடத்தக்கது. மற்றொரு ஆட்டத்தில் 2004ஆம் ஆண்டு சம்பியனான ரஷ்யாவின் மரிய ஷரபோவா 6-2, 6-3 என்ற நேர் செட்டில் செக்குடியரசின் கிளாராவை வீழ்த்தினார்.

அதே சமயம் முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனை செர்பியாவின் இவானோவிச் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அவரை செக்குடியரசின் பெட்ரா செட் கோவ்ஸ்கா 6-3, 7-6 (7-0) என்ற நேர் செட்டில் தோற கடித்தார். மரியன் பார்டோலி (பிரான்ஸ்), மார்ட்டி பிஷ (அமெரிக்கா), மார்ட்டின் டெல் போட்ரோ (ஆர்ஜென்டினா) ஆகியோரும் தங்களது ஆட் டங்களில் வெற்றி கண்டனர். ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந் தியாவின் லியாண்டர் பயஸ்-மகேஷ் பூபதி ஜோடி 2ஆவது சுற்றுடன் வெளியேறியது. அவர்களை அர்னட் கிளைமெண்ட்(பிரான்ஸ்)- லுகாஸ் லோகி (செக்குடியரசு) ஜோடி 2-6, 6-3, 7-6 (1), 6-4 என்ற செட் கணக்கில் வென்றது.

பயஸ்-மகேஷ் பூபதி ஜோடியின் வெளியேற்றம் பெரும் ஏமாற்றமாக அமைந்தாக இந்திய ரென்னிஸ் ரசிகர்கள் கவலையடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

# பல்கலைக்கழகத்திற்கு மாணவர் அனுமதி நடைமுறையில் பல்வேறு பிரச்சினைகள்

## சுட்டிக்காட்டுகிறார் அனுரகுமார திஸாநாயக்க எம்.பி.

(கொழும்பு)

பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான நடைமுறையில் பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது, வெளிநாட்டு மாணவர்களுக்கு ஐந்துவீத ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுவதால், கஷ்டப்பட்ட பிரதேச மாணவர்களுக்கு அநீதி ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்கனவே விபரங்கள் வெளியிடப்படாது, வெற்றிடம் ஏற்படுத்தப்பட்டு, வெளிநாட்டு மாணவர்களுக்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளமை இதன் மூலம் தெளிவாகுவதாக அனுரகுமார திஸாநாயக்க கூறினார்.

குறிப்பாக இலங்கையில் கல்வி வசதியுடைய கஷ்டப்பிரதேச 16 மாவட்டங்களுக்காக ஐந்து சதவீதமே ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், இந்த நிலைமையின் கீழ் வெளிநாட்டு மாணவர்களுக்காவும் அதே சதவீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன் மூலம் வெளிநாட்டு மாணவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டதை விட கூடுதல் ஒதுகீடு வழங்கப்பட்டுள்ளமையானது, கஷ்டப் பிரதேச மாவட்டங்களின் மாணவர்களின் கல்விக்கான சந்தர்ப்பங்கள் இல்லாது போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# கையடக்கத் தொலைபேசிக் கட்டணத்தை குறைப்பதற்கான அனுமதி வழங்கல்

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளின் கட்டணத்தை மேலும் குறைப்பதற்கான அனுமதியை கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களுக்கு வழங்க தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அடுத்த மாதம் தொடக்கம் ஒரு நிமிடத்திற்கு ஆகக் குறைந்த கட்டணமாக ஒரு ரூபாய் 50 சதத்தினை அறவிடுவதற்கான அனுமதியை வழங்கவுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட குறிப்பிட்டார்.

தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் கையடக்கத் தொலைபேசி சேவைகளுக்கான ஆகக் குறைந்த கட்டணமாக இரண்டு ரூபாய் அறவிடப்படுகின்றது.

நிலையான தொலைபேசி சேவைகளுடன் ஒப்பிடுகையில் கையடக்கத் தொலைபேசிகளின் பாவனையும் தற்போது அதிகரித்துச் செல்வதாக அனுஷ பெல்பிட்ட கூறினார்.

இலங்கையில் சுமார் 20 மில்லியன் தொலைபேசிகள் உபயோகிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுள் 17 மில்லியன் கையடக்கத் தொலைபேசிகளும் அடங்குவதாக தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

# புலிகளுக்கு ஆதரவான சக்திகளுக்கு இணையாக பிரசாரங்களை மேற்கொள்ள அரசு தவறிவிட்டது

## தூதுவர் பிரசாத் காரியவசம் கூறுகிறார்

(கொழும்பு)

**மேற்குலக நாடுகளில் இலங்கை வலுவான பிரசாரங்களை மேற் கொள்ளத் தவறியுள்ளதாக இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.**



புலிகளுக்கு ஆதரவான சக்திகள் மேற்கொள்ளும் அளவிற்கு இலங்கை அரசாங்கத் தரப்பு பிரசாரங்களை மேற்கொள்ளத் தவறியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் இலங்கை விவகாரங்கள் விவாதிக்கப்பட மாட்டாது.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக காலத்துக்கு காலம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவைக்கு விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

சனல் - 4 ஊடகத்தின் ஆவணப்படம் போலியானது. இவ்வாறான ஆவணப் படங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்கப் பணிகளுக்கு ஒரு போதும் நன்மை அளிக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காயங்களை ஆற்றுவதற்கு பதிலாக சிலர் அவற்றை மேலும் மோசமடையச் செய்கின்றனர் மனித உரிமைகளை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

13ஆம் திருத்தச் சட்ட மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு மிகவும் பொருத்தமான தீர்வுத் திட்டமாக அமையாது.

நாட்டின் சகல தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வரப்படுகிறது.

தமிழகத்தின் சிரேஷ்ட அரசியல்வாதிகள் இலங்கையின் தற்போதைய நிலைமையை நேரில் பார்வையிடுவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடர சர்வதேச மன்னிப்புச் சபை முயற்சி

## என்கிறது சிங்கள ஊடகம்

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சனல் - 4 ஊடகத்தின் முயற்சிகளை மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா முறியடித்ததனால் ஆத்திரமடைந்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை இவ்வாறு இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடர திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் போர்க் குற்றம் இடம்பெற்றதாகத் தெரிவித்தே இந்த வழக்குத் தொடரப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த 23ஆம் திகதி கனடாவில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்த திட்டத்தை வெளியிட்டுள்ளது.

பிரிட்டன் மற்றும் சுவிட்சர்லாந்தில் உள்ள சிரேஷ்ட சட்ட நிபுணர்களின் ஒத்துழைப்புடன் இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சனல்- 4 ஊடகத்தின் பிரசார நடவடிக்கைகளுக்கு ஜே.டி.எஸ் என்னும் ஊடக அமைப்பு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# எதிர்பார்த்த பலனைத் தராத டெங்கு ஒழிப்பு செயற்திட்டம்

(கொழும்பு)

டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தினை ஒரு வாரகாலம் முன்னெடுத்தும் எதிர்பார்த்தளவு பலன் கிட்டவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தை இல்லாதொழிப்பதற்கு மக்கள் உரிய முறையில் செயற்படுவது அவசியமானதென அமைச்சின் மேலதிக செயலாளர் டொக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த 20 ஆம் திகதிமுதல் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சின் அதிகாரிகள், முப்படையினர், பொலிஸார் மற்றும் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்தச் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

சுகாதார அதிகாரி பிரிவுகளை இலக்காகக் கொண்டு, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

இதன் போது நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், உறிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை, அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் என அனைத்திலும் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

டெங்கு நுளம்புகள் பெருகுவதை தடுப்பதற்கு மக்களின் பூரண ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதென அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

# அமெரிக்க நீதிமன்ற வழக்கை எதிர்கொள்ள சட்ட நிபுணரை நியமிக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றம் ஒன்று அனுப்பியுள்ள அழைப்பாணைக்குப் பதில் அனுப்பப் போவதில்லை என்று கூறியிருந்த இலங்கை அரசாங்கம், இப்போது இந்த வழக்கை எதிர்கொள்ள சட்டநிபுணர் ஒருவரை நியமிக்க முடிவு செய்துள்ளது.

இந்த வழக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நலன்களைக் கவனிக்க அமெரிக்காவைச் சேர்ந்த சட்டநிபுணர் ஒருவரை நியமிப்பதற்கான முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் இறங்கியுள்ளது.

இதுதொடர்பாக இலங்கை நீதி அமைச்சின் செயலர் சுகத கம்லத் தகவல் வெளியிடுகையில், ஜனாதிபதிக்கு அழைப்பாணை விடுத்துள்ள அமெரிக்க நீதிமன்றில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நலன்களைக் கவனிக்க சட்டநிபுணர் ஒருவரை சட்டமா அதிபர் திணைக்களம் பணிக்கு அமர்த்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

படையினரால் படுகொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் உறவினர்களால் அமெரிக்க நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நட்டஈடு கோரும் மூன்று வழக்குகளிலேயே ஜனாதிபதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

முன்னதாக இந்த அழைப்பாணையை நிராகரித்து ஏற்க மறுத்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தற்போது இந்த வழக்கை எதிர்கொள்வதற்கு முடிவு செய்துள்ளார்

# புலிச்சந்தேக நபர்களைச் சந்திக்க சட்டத்தரணிகளை அனுமதிக்க வேண்டும்

## சட்டமா அதிபருக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

புலிச் சந்தேக நபர்களை சந்திப்பதற்கு சட்டத்தரணிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் சட்ட மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிச் சந்தேக நபர்களை பார்வையிடுவதற்கு அவர்களின் சட்டத்தரணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டுமென அறிவித்துள்ளது.




மேரியம் ஜோசப் டேவிட் என்ற நபரினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான விசாரணைகளின் போது உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவினைப் பிறப்பித்துள்ளது.

பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை பார்வையிடுவதற்கு அவர்களின் உறவினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதிலும், சட்டத்தரணிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை எனத் தெரிவித்து மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தமது கட்சிக்காரர் தொடர்பிலான தரவுகளைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் நிலவுவதாக சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சுமார் 2000 புலி சந்தேக நபர்கள் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களுக்குப் பொருத்தமான பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.






31........................ 32........................ 33........................

பின்வரும் வினாக்களில் 1ஆம், 2ஆம் உருக்களுக்கு இடையில் ஏதோவொரு வகையில் தொடர்புள்ளது. அதற்கமைய 3ஆம் உருவுக்குப் பொருத்தமான உருவை A, B, C, D ஆகிய நான்கு உருக்களிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.



A B C D



சிறிய கட்டத்தின் ஒரு பக்க நீளம் 2 சென்ரி மீற்றர் ஆகும்.

35. நிறந்தீட்டப்பட்ட பகுதி மொத்தத்தில் என்ன பின்னம்?

........................................

36. நிறந்தீட்டப்பட்ட பகுதியின் சுற்றளவு, யாது?

........................................

37. பெரிய செவ்வகத்தின் சுற்றளவு யாது?

........................................

**கீழே தரப்பட்டுள்ள கருத்துக்களுக்குப் பொருத்தமான பழமொழிகளைத் தெரிந்தெழுதுக.**

38. அளவு தெரியாமல் செலவு செய்யக்கூடாது.

........................................

39. சிறு வயதிலே பெற்றுக்கொள்கின்ற கல்வி என்றும் நிலைத்திருக்கும்

........................................

40. உதவி செய்தவரை எப்போதும் மறக்கக்கூடாது.

........................................



பொதுசன நூலகம்
மாவாந்துறை படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I
நேரம் -45 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 20



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**கீழே தரப்பட்டுள்ள எண்களையும் இலக்கங்களையும் அவதானித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.**

S, 2, 5, S, 7, N, R, S, 4, 2, R, 3, S, N, N, O

01. அதிக தடவைகள் எழுதப்பட்டுள்ள இலக்கம் எது?

........................................

02. வலப்பக்கத் தொடக்கத்தில் இருந்து ஐந்தாவதாக வரும் இலக்கம் அல்லது எழுத்தைச் சுற்றி கட்டமிடுக.

........................................

03. இடப்பக்க ஆரம்பத்தில் இருந்து எட்டாவதாக இருக்கும் இலக்கம் அல்லது எழுத்தைச் சுற்றி வட்டமிடுக.

........................................



04. கூடுதலான தடவைகள் எழுதப்பட்டுள்ள ஆங்கில எழுத்து யாது?


........................................

05. இங்கு உறவுமுறையொன்று மறைந்து வந்துள்ளது. அவ்வுறவு முறை யாது?

........................................

**கீழே தரப்பட்டுள்ள பறவைகளின் கால்களை நன்கு அவதானித்து அவற்றுக்குப் பறவையின் பெயரை எழுதுக.**




06........................ 07........................ 08........................ 09........................

**பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையை இனங்கண்டு சரியான இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

10. கீழ் வரும் உருக்களுள் ஒன்று சமச்சீரற்றது. அவ்வுருவின் கீழ்க் கோடிடுக.

1. Z 2. M 3. E 4. B

11. கீழே தரப்பட்டுள்ள உருக்கூட்டங்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதற்கேற்ப அதன்கீழ் தரப்பட்டுள்ள விடையினைத் தெரிந்து அதனைச் சுற்றி வட்டமிடுக.




1. ABD, EAF    2. DFB, AEC    3. GAE, CDE    4. BCE, GED

**மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

12. முன்னிலை பன்மைச் சொல்?
   1. நீ    2. நாம்    3. நீங்கள்    4. மயூரன்

13. உயர்திணை பெண்பால் இறந்தகால வினைமுற்று
   1. வந்தாள்    2. ஓடினான்    3. வந்தன    4. ஓடிய

14. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன
   1. ஐம்பூதம்    2. ஆறறிவு    3. ஐம்பொறி    4. பஞ்சமாபாதகம்

15. உலகில் அதிகூடிய மக்கள் தொகையைக் கொண்ட நாடு
   1. பாகிஸ்தான்    2. இந்தியா    3. சீனா    4. வத்திக்கான்

16. முட்டையிட்டு குஞ்சு பொரித்து குட்டிகளுக்குப் பாலூட்டும் பிராணி
   1. வெளவால்    2. எறும்புதிண்ணி    3. யானை    4. பாம்பு

17. துள்ளித்துள்ளி ஓடிய முயல் புதர் ஒன்றினுள் மறைந்தது. இங்கு "ஓடிய" எனும் சொல்
   1. பெயர்    2. பெயரெச்சம்    3. வினையெச்சம்    4. வினை

18.



அருகில் தரப்பட்டுள்ள உரு..
   1. பசன்புரூட்
   2. முசுமுசுக்கை
   3. ஊமத்தை
   4. கர்ப்பூரவள்ளி

**பின்வரும் வினாக்களுக்குப் புள்ளிக்கோட்டில் விடை எழுதுக.**

19. மனோ 850 முத்திரைகளைச் சேமித்து வைத்திருந்தான். அவனது நண்பன் அஜித் 1550 முத்திரைகளை வைத்திருந்தான். இருவரும் சம எண்ணிக்கையில் முத்திரைகளைப் பகிர்ந்து கொண்டனர் எனின், அஜித், மனோவுக்கு எத்தனை முத்திரைகளைக் கொடுக்க வேண்டும்?

.............................................................................................................

20. குமார் 30 குன்றிமணிகளைப் பொறுக்கி எடுக்கும்போது, நிசார் 20 குன்றிமணிகளைப் பொறுக்கி எடுத்தான். நிசார் 10 குன்றிமணிகளைப் பொறுக்கி எடுக்கும்போது சசி 18 குன்றிமணிகளைப் பொறுக்கி எடுத்தான் எனின்,
   i. மிக வேகமாக குன்றிமணிகளைப் பொறுக்கி எடுப்பவர் யார்?

   .............................................................................................................



   ii. நிசார் 30 குன்றிமணிகளைப் பொறுக்கி எடுக்கும்போது, சசி எத்தனை குன்றிமணிகளைப் பொறுக்கி எடுத்திருப்பான்?


   .............................................................................................................

21. இன்று புதன்கிழமை. நாளை மறுநாள் 15ஆம் திகதி. நேற்றைக்கு முதல் நாள் என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடினேன் எனில், நான் எத்தனையாம் திகதி பிறந்த நாளைக் கொண்டாடினேன்?


.............................................................................................................

**கீழே தரப்பட்ட உபகரணங்களின் பெயர்களைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**


22.



23.




24.



..............................    ..............................    ..............................

**கொடுக்கப்பட்டுள்ள உருவை அவதானித்து அதன் கீழ் வினாவப்படும் வினாக்களுக்கு விடையளிக்க.**




25. முக்கோணத்திற்கு மட்டும் உரிய இலக்கம் யாது?

.............................................................................................................

26. வட்டத்திற்கும், சதுரத்திற்கும் உரிய இலக்கங்கள் எவை?

.............................................................................................................

27. வட்டத்திற்கு மட்டும் உரிய இலக்கங்கள் யாது?

.............................................................................................................

**மிகப்பொருத்தமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

28. ஒரு வரிசையில் ஐந்து மாணவர்கள் நின்றார்கள். A யிற்கு முன்னால் B நின்று கொண்டிருந்தான். கடைசியில் நின்றவர் C, C யிற்கு முன்னால் E யும் D யும் நின்றனர். ஆகவே, வரிசையில் முன்னால் நிற்பவர் யார்?

.............................................................................................................

29. அமலா குடும்பத்தில் மூத்தவள். அவளது தந்தையின் குடும்பத்தில் தந்தையே மூத்தவர். அமலாவின் தந்தைக்கு இரண்டு சகோதரர்கள். அவர்களில் ஒருவர் திருமணம் முடித்தவர். அவருக்குப் பிரபா என்ற பெயரில் மகன் இருக்கிறார். அமலாவின் தந்தைக்குப் பிரபா என்ன முறை?

.............................................................................................................

30. அன்னாசிப் பழம் 1 கிலோகிராம் 48, வாழைப்பழம் 2 கிலோகிராம் 54 எனின், சதீஸ் கடைக்குச் சென்று அன்னாசிப் பழம் 1 கிலோ 250 கிராமும், வாழைப்பழம் 1 கிலோவும் வாங்கினான் எனின்,
   i. அவன் கடைக்காரருக்குக் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?


   .............................................................................................................

   ii. சதீஸ் ரூபா 200 கடைக்காரருக்குக் கொடுத்தான் எனின், கடை முதலாளி சதீஸிடம் கொடுக்க வேண்டிய மிகுதிப் பணம் எவ்வளவு?

   .............................................................................................................

விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2011 - கல்விமுரசு

# பாம்பை விழுங்கும் பாம்பு



தன் இனமே தன் இனத்தை அடித்து உண்ணும் அவலமான நிலையில் இன்று காலம் நகர்ந்து செல்கின்றது. அந்த வகையில் இந்தப் பாம்பு இனைக கின்றது. இதுவரையில் பாம்பும் கீரியும் சண்டை போடுவதைப் பார்த் திருப்போம். வேறு சில ஊர்வன வற்றை உண்ணும் கொடுமை கண்டிருப்போம் ஆனால் தன் இனமான பாம்பையே உண்ணும் காட்சியை யாரும் பார்த்திருக்க வாய்ப்பில்லை. பாம்புகளின் ராஜவான நாகப்பாம்பு ஒன்று அப்பாவியான சாரைப் பாம்பு ஒன்றை உண்ணும் காட்சி.

# மிகச் சிறிய கார்

P50 என்றழைக்கப்படும் இந்த மிகச்சிறிய கார் 1962 - 1965ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.



P50 காரின் நீளம் 134 சென்ரிமீற்றர், அகலம் 99 சென்ரிமீற்றர் ஆகும். இதன் மொத்த எடை 59 கிலோ. மணிக்கு 61 கிலோமீற்றர் வேகத்தில் இயங்கு கிறது.

# வலிமையான பெண்



இரண்டு முறை உலக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற வர்யா உலகின் வலிமையான பெண் என்ற பெருமையைப் பெற்றவர் ஆவார். 40 கிலோ எடையுள்ள வர்யா 350 கிலோ நிறையுள்ள பொருட்கள் வி ஆலுர சுலபமாக தூக்கிக் காட்டி சாதனை படைத்துள்ளார்.

வர்யாவின் உயரம் 190 சென்ரிமீற்றர் ஆகும். தற்போது 10 ஆம் வகுப்பு படிக்கும் இவர் படிப்பிலும் சிறந்த மாணவி என்ற பெருமையை பெற்றுள்ளார்.

# இதற்கும் பேசப்படுகிறது விலை


**சீ**ன நாட்டைச்சேர்ந்த இளைஞர்கள் மற்றும் யுவதிகள் அப்பிள் நிறுவனத்தின் உயர்ந்த தயாரிப்புக்களை வாங்குகின்றமைக் காக மிகவும் பாரதூரமான தீர்மானங்களை எடுக்கின்றார்கள். ஐ போன் ஒன்றுக்காக கற்பை பண்டமாற்று செய்ய முன்வந்துள்ளார் கட்டிளம் யுவதி ஒருவர்.

இவருடைய இலட்சியக் கனவு ஐ போன் ஒன்றை சொந்தமாக வைத்திருக்க வேண்டும்

சமூக இணைப்பு இணையத்தளங்களில் ஒன்று வெய்போ ஐ போனைத் தரக்கூடிய எவரேனும் ஒருவருடன் படுக்கையை பகிர்ந்து கொள்கின்றமைக்கு தயார் என்று வெய்போ மூலமாக அறிவிப்பு

1990களில் பிறந்தவர் என்று குறிப் பிட்டுள்ளார். இவரது அறிவிப்பு இணைய மற்றும் ஊடக உலகத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் இவரது அறிவிப்புக்கு வெய்போ சமூக இணைப்பு இணையத் தள பாவனையாளர் களிடம் இருந்து வன்மை யான கண்டனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.






கற்பு என்பது விலை மதிப் பற்றது, ஐ போன் ஒன்றுக் காக இழக்கப் படவேண்டியது அல்ல என்பது கண்டனங்களின் அடிப்படையாக உள்ளது.

சீனாவில் கடந்த ஏப்ரல் மாதம் 17 வயது பையன் ஒருவர் ஐ பாட், ஐ போன் ஆகியவற்றை வாங்குகின்றமைக்காக ஒரு சிறுநீரகத்தை விற்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்ணாடிப் பாலம்



கிராண்ட் கனியன் Colorado நதிக்கு மேலே 4,000 அடி உயர மலையின் விளிம்பில் வடிவமைக்கப்பட்ட இந்தப் பாலம் உலகின் மிகப்பெரிய கண்ணாடிப் பாலம் ஆகும். 2007 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட இந்த கண்ணாடிப் பாலத்தின் இறுதி சோதனை நடைபெற்றது.

இதில் 747 விமானங்களின் எடையை இந்த கண்ணாடிப் பாலம் தாங்கும் என்று உறுதி செய்யப்பட்டது. அதாவது (71 மில்லியன் Bounds) எடையாகும்.

# சூரிய சக்தியில் மடிக் கணினி

இப்போதெல்லாம் மின்சக்தி மற்றும் எரிபொருள் சக்தி என்பவற்றுக்கு பதிலாக இயற்கைச் சக்திகளை பயன்படுத்தி தொழில் நுட்ப சாதனங்களை இயக்குவதற்கான ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில் இலத்திரனி யல் சாதன உற்பத்தியில் பெரும் நிறுவன மான

சாம்சுங் நிறுவனம் சூரிய சக்தியின் மூலம் இயங்கும் மடிக்கணினிகளை ஜூலை மாதத்தில் அமெரிக்க சந்தையில் அறிமுகம் செய்யவுள்ளது. இது NET BOOK NC215S என்ற பெயரில் வெளியிடவுள்ளது. இதன் திரை 10.1 அங்குல அளவுடையது. மேலும் 1GB அளவு RAM MEMORY. இன்டெல் ATOM N570 DUAL CORE செயலியை கொண்டது. ஹாட் டிஸ்க் கொள்ளளவு 250GB மற்றும் 320GB ஆகும். முழுமையாக சார்ச் செய்யப்பட்ட பற்றரி மூலம் 14 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக பாவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 6 செல் சூரிய சக்தியை சேமிக்கும் பற்றரிகள் உள்ளன. அத்துடன் USB போர்ட் வெப்காம் மற்றும் போன்ற வசதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

# உங்களுடைய TEXT FILE களை பேச வைக்க


நீங்கள் ஈமெயில் அல்லது ஒரு இணையத்தளத்தில் உள்ளவற்றை படிக்க சிரமப்பட்டாள் நீங்கள் அந்த வரிகளை ஒரு Text குடைநலில் ஊழில செய்து விட்டு இந்த SOFTWARE மூலம் அதை கேட்கலாம்.

இதனால் படிக்கின்ற வேலை உங்களுக்கு மிச்சம் ஆகிறது. இந்த Text Fileiy நீங்கள் WAV, MP3 or VOX Files ஆக Convert செய்து சேமித்து வைத்து கொள்ள முடியம். இந்த மென்பொருளை உங்கள் COMPUTER இல் Instal செய்த பின்பு அந்த மென்பொருளை திறக்கவும் செய்யவும். பின்பு அந்த மென்பொருள் லில் உள்ள Open எனும் Optiona; பயன்படுத்தி ஒரு Text Filea; Open செய்து விட்டு. கீழ உள்ள play பட்டனை அழுத்தினால் உங்கள் Text File படிக்கப்படும்.

தரவிறக்க சுட்டி:- http://download.cnet.com/TextSpeech-Pro/3000-7239_4-11367871.html

# பிடிஎப் கோப்புகளை சேர்க்க மற்றும் பிரிக்க

பிடிஎப் கோப்புகளை மாற்றம் செய்து உரிய கோப்பாகவும், குறிப்பிட்ட கோப்பினை மாற்றம் செய்து பிடிஎப் கோப்பாக செய்வதற்கு இணையத்தில் பல்வேறு இலவச மென்பொருள்கள் கிடைக்கிறன. ஆனால் பிடிஎப் கோப்புக்களை உடைக்கவோ அல்லது ஒட்டு வதற்கோ மென்பொருள்கள் குறைவு. பிடிஎப் கோப்புக்களை இணைக்கவும் பிரிக்கவும் Hexonic PDF Split and Merge என்ற மென் பொருள் உதவி செய்கிறது.



இந்த மென்பொருள் மூலம் எளிமையாக பிடிஎப் கோப்புக்களை ஒன்றிணைக்கவும் முடியும். மற்ற மென்பொருள்களை ஒப்பிடுகையில் சிறப்பான மென்பொருள் ஆகும். இந்த மென்பொருள் இலவச மென்பொருள் ஆகும்.

இந்த மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கி கணனியில் நிறுவிக் கொள்ளவும். பின் ஒரு முறை கணினியை மறுதொடக்கம் செய்து கொண்டு. பின் இந்த அப்ளிகேஷனை ஓப்பன் செய்யவும். பின் வேண்டிய பிடிஎப் கோப்பை தேர்வு செய்யது இணைத்துக்கொள்ளவும். பிடிஎப் கோப்பை இணைக்க வேண்டுமெனில் சாதரணமாக பிடிஎப் கோப்புக்களை உள்ளிணைத்துவிட்டு பின் Start Processing என்னும் பொத்தானை அழுத்தி இணைத்துக்கொள்ள முடியும். வேண்டுமெனில் எழுத்துருவின் அளவினை மாற்றியமைத்துக்கொள்ளவும் இந்த மென்பொருள் அனுமதி செய்கிறது. Format என்னும் பொத்தானை அழுத்தி எழுத்துருவையும் மாற்றியமைத்துக் கொள்ள முடியும். பிடிஎப் கோப்பினை சுருக்கவும் இந்த மென்பொருள் வழிவகை செய்கிறது. Layout options என்பதை தேர்வு செய்து அதில் விருப்ப பொத்தானை அழுத்தி பிடிஎப் கோப்பை தனித்தனியாகவும் பிரித்துக் கொள்ள முடியும். ஒரு பிடிஎப் கோப்பில் உள்ள அனைத்துப் பக்கங்களையும் தனித்தனியாவும் அல்லது ஒரே பக்கத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட பக்கங்களையும் சேர்க்க முடியும். இதனால் அதிக பக்கங்களுடைய பிடிஎப் கோப்பை குறைந்த பக்கங்களாக குறைக்க முடியும்.

தரவிறக்க சுட்டி: - http://www.hexonic-software.com/

கணினி மூலை

# தேர்தல்களில் கறுப்பு பணப் புழக்கம் அதிகரிப்பு கவலை என்கிறார் தேர்தல் ஆணையாளர்

(லண்டன்)

**இந்தியாவில் நடக்கும் தேர்தல்களில் கறுப்புப்பணப் புழக்கம் அதிகரித்துள்ளது. இது கவலை தரும் அம்சம்.**

**தேர்தல்களில் கறுப்புப்பணப் புழக்கம் மேலோங்கி இருப்பதால் தேர்தல் செலவுக்கு அரசு நிதியுதவி அளிக்கும் திட்டம் பலன் தராது என இந்திய தலைமைத் தேர்தல் கமிஷனர் குரேஷி கூறியுள்ளார்.**



ஐரோப்பிய நாடுகளின் இந்திய பத்திரிகையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த கூட்டம் லண்டனில் நடைபெற்றது. இதில் இந்திய தலைமைத் தேர்தல் கமிஷனர் குரேஷி பேசியதாவது: தேர்தல்களில் ஆள்பலத்தை பயன்படுத்துவது வரலாறு ஆகிவிட்டது.

இந்தியச் செய்திகள்

அதே நேரத்தில் பண பலமும் அதிகரித்துள்ளது. இந்தியாவில் நடக்கும் தேர்தல்களில் கறுப்புப் பணப் புழக்கம் அதிகரித்துள்ளது. இது கவலை தரும் விடயம். இந்த சூழ் நிலையில் தேர்தலின் போது அரசியல் கட்சிகளின் செலவுக்கு அரசே பணம் வழங்கும் அல்லது நிதி உதவி அளிக்கும் திட்டத்தை அமுல் படுத்துவதில் எனக்கு உடன்பாடு இல்லை.

அப்படி அமுல்படுத்தினால் அதனால் பெரிய அளவில் பலன் கிடைக்காது. அதை மீறி இந்த நடைமுறை அறிமுகப் படுத்தப்பட்டால் தலைமைத் தேர்தல் கமிஷன் எதிர்க்காது.

அரசியல் கட்சிகளின் தேர்தல் செலவுக்கு அரசே பணம் வழங்கினாலும் தேர்தலில் கறுப்புப் பணப் புழக்கத்தை கட்டுப்படுத்த முடியாது. கறுப்புப்பணம் வைத்திருப்பவர்கள் அதை செலவழிக்கத் தான் செய்வர்.

இந்தியாவின் தேர்தல் நடைமுறையை பல்வேறு நாட்டினரும் பாராட்டி கேட்டு அறிந்து வருகின்றனர்.

மற்ற நாடுகளுக்கு இந்திய தேர்தல் நடைமுறையை கற்றுக் கொடுக்க "சர்வதேச ஜனநாயகம் மற்றும் தேர்தல்" என்ற பெயரில் நிறுவனம் தொடக்கப் பட்டு முதன் முதலாக கென்யா நாட்டினருக்கு பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது.

# தமிழக மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினை நாடாளுமன்றில் பாரதீய ஜனதா பேசும்

## ஜெயலலிதாவை சந்தித்த பின் சுஷ்மா பேட்டி



(சென்னை)

தமிழக மீனவர் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்போம் என்று பா.ஜ. தலைவர் சுஷ்மா கூறினார்.

ஜெயலலிதாவை அவரது வீட்டில் பா.ஜ. மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான சுஷ்மா சுவராஜ் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பு சுமார் அரைமணி நேரம் நடந்ததுள்ளது. அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், இலங்கைப் படையால் தமிழக மீனவர்களுக்கு தினந் தோறும் பிரச்சினைகள் இருந்து வருகிறது. மீனவர்கள் காப்பாற்ற மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை தமிழர்களுக்கு சம உரிமையுடன் மறுவாழ்வு கிடைக்கும் வரை இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும் கச்சத்தீவை மீட்கும் வழக்கில் தமிழக அரசையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். என்றும், சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை பா.ஜ. வரவேற்கிறது இந்த தீர்மான நகலையும் அது தொடர்பான ஆவணங்களையும் கொடுத்தால் நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு உதவியாக இருக்கும் என்று கேட்டுள்ளேன்.

காங்கிரஸ் கட்சியில் இப்போது 1ஆவது தடவையாக டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. காஸ் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது. விலை உயர்வை வாபஸ் பெறவேண்டும் இவ்வாறு கூறினார்.

# தனது வீட்டில் அமைக்கப்பட்ட காட்சியகத்தை இன்று திறந்து வைக்கிறார் அப்துல்கலாம்

(ராமேஸ்வரம்)

ராமேஸ்வரத்திற்கு இன்று வரும் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தனது வீட்டில் அமைக்கப்பட்டுள்ள காட்சியகத்தைப் பார்வையிடுகிறார். ராமேஸ்வரம் முஸ்லிம் தெருவில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் பூர்வீக வீட்டில், அவரது அண்ணன் மொகமட் முத்துமீரான் மரைக்காயர் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். பழமையாக இருந்த வீடு இடிக்கப் பட்டு, தற்போது இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. முதல் தளத்தில் கலாம் பள்ளி, கல்லூரியில் படித்த காலம் முதல் ஆராய்ச்சியாளராக, ஏவுகணை விஞ்ஞானியாக, ஜனாதிபதியாக இருந்த போது செய்த சாதனைகள் குறித்த ஆவணங்கள், பெற்ற விருதுகள், போட்டோக்கள், எழுதிய புத்தகங்கள் ஆகியவை அடங்கிய காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் ராமேஸ்வரம் வந்து செல்லும் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள இதன் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மதியம் 12 மணிக்கு, தன் அண்ணனை சந்திப்பதற்காக ராமேஸ்வரம் வரும் அப்துல் கலாம், இந்தக் காட்சியகத்தை பார்வையிடுகிறார். அதன்பின் பொது மக்கள் பார்வையிட இலவசமாக அனுமதிக்கப்படும்.

# கடல் எல்லை தெரியாது என மீனவர் கூறுவதை ஏற்கமுடியாது

## உயர்நீதிமன்ற நீதிபதி தெரிவிப்பு

(சென்னை)

மீனவர்கள் கடல் எல்லையை தெரிந்து வைத்திருக்க வேண்டும். கடல் எல்லை தெரியாது என்று சொல்வதை ஏற்கமுடியாது என்று உயர்நீதிமன்ற நீதிபதி தர்மாராவ் கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ஐ.எல்.ஓ.) அறிக்கைபடி உலகம் முழுவதும் 3 கோடியே 60 இலட்சம் பேர் மீனபிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஆண்டு தோறும் சுமார் 24 ஆயிரம் மீனவர்கள் காணாமல் போகிறார்கள். மீன்பிடிப்பதற்காக கடலில் நீண்ட தூரம் செல்லும் அப்பாவி மீனவர்கள் எல்லை தாண்டிச் சென்றுவிடுகிறார்கள்.

கடலில் எல்லை தாண்டி செல்லும் மீனவர்கள் அண்டைய நாட்டு கடற் படையினரால் கைது செய்யப்படுவதை பார்க்கும்போது வேதனையாகத் தான் உள்ளது. மீனவர்கள் கடலில் எல்லை தெரியாது என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. சட்டத்தை மீறுகிறவர்கள், எனக்கு சட்டம் தெரியாது என்று சொன்னால் அதை யாரும் ஏற்கமாட்டார்கள். அது போலத்தான் மீனவர் களின் நிலையும்.

மீனவர்கள் கடல் எல்லையை தெரிந்து வைத்திருக்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். கடல் எல்லை தெரிந்திருந்தால் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் சம்பவங்களும், கைது செய்யப்படும் சம்பவங்களும் மீண்டும் நிகழாது.

இவ்வாறு நீதிபதி தர்மாராவ் கூறினார்.

# வேலைவாய்ப்புச் செய்திகள்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு 111இல் 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதிபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் முடிவு திகதி 25.07.2011. மேலதிக விபரங்கள் 24.06.2011 இல் வெளிவந்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பக்கம் 11 இல் காணலாம்.

* சம்பந்தர் மொடேர்ன் கிளினிக் நிறுவனத்தில் தாதியர் உதவித்தாதியர் பயிற்சி பெறவிரும்புவர்கள்.

இல,08,இராமையாச் செட்டியார் வீதி, யாழப்பாணம். தொலைபேசி இலக்கம் 021 2227259 இற்கு தொடர்பு கொள்ளவும்.

* யாழ்ப்பாண மின்னகம் நிறுவனத்தில் கணினி தொடர்பான அறிவும் அனுபவமும உள்ளவர்களுக்கு பணி நிலை வெற்றிடம் உண்டு. ஆர்வமுள்ளவர்கள் 29.06.2011 அன்று மு.ப 11.00 பி.ப 3.00 நேரத்தில் சுயவிபரக்கோவை மற்றும் சான்றிதழ்களுடன் 141,மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

* ஓமந்தையில் வீதித்திருத்த வேலையில் ஈடுபட்டிருக்கும் ICC நிறுவனத்திற்கு சட்டரிங் தொழில்,தொழிலாளர்கள மற்றும் சமையல்காரர்கள் போன்ற வேலைகளுக்கு ஆட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777749789 இற்கு தொடர்பு கொள்ளவும்.

* **Auto CAD or Accounting Soffware** ஐ விரிவுரை/பயிற்றுவிக்க கூடிய ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் வவுனியா, யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மற்றும் தண்ணீருற்று பிரதேசங்களில் பணியாற்ற விரும்புவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

The Human Resourse Manager,
Techno World Studies (Pvt) Ltd,
No: 06 Station Road, Karappankadu, Vavuniya.

* Audio/Video தொழில்நுட்பவியலாளர், **Camera** திருத்துபவா, AC/ குளிர் சாதனபெட்டி திருத்துபவர் அல்லது பயிலுனர் தொழில் நுட்பவியலாளர் சாரதி உதவியாளா ஆகியோருக்கு கொழும்பில் உள்ள நிறுவனத்தில் வெற்றிடங்கள் உள்ளன.

No: 23 Galle Road, Dehiwala என்ற முகவரிக்கு அல்லது Fax இலக்கம் 0112 2727766 என்ற எண்ணிற்கு விண்ணப்பிக்கவும்.

* பெயின்ட் உற்பத்தி தொழிற்சாலையில் **(Lobour)** வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. 25 வயதிற்கு உட்பட்ட ஆர் வமுடையவர்கள் 20A, Bandaranayaka Mawatha, Mahabage என்ற முகவரிக்கு நேரில் அல்லது 0112 952595 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

*நகைக்கடை ஒன்றிக்கு 02 உதவி முகாமையாளர்களுக்கு வெற்றிடம் உண்டு. ஆர்வமுடையவர்கள் 0777 794117 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

* வவுனியாவில் சர்வதேச பாடசாலைக்கான தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தேர்ச்சியுடைய முகாமையாளர் (பெண்) இணைப்பாளர் (பெண்) தேவை

VTL Management Services (Prt) Ltd
No: 01,1St Floor, Deanston House,
Deanston Placc Colombo - 03 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

* வெள்ளவத்தையில் இயங்கும் **Beauty Parlour** பெண்கள் அழகு நிலையத்திற்கு அனுபவமுள்ள பெண்கள் வேலைக்கு தேவை

No: 8A,Hampden lane, Wellawatte,colombo -06 Tel: 077 6906212 இற்கு தொடர்பு கொள்ளவும்.

*அனைத்து மாவட்டங்களுக்கும் அனுபவமுள்ள/அனுபவமற்ற விற்பனை பிரதிநிதி தேவை. நிரந்தர ஊதியமும் கொமிசனும் வழங்கப்படும். 075 6827682 இற்கு தொடர்பு கொள்ளவும்.

* பிளாஸ்ரிக் (PET) போத்தல் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை. 0777 772846, 0777772845,0774722062 இற்கு தொடர்பு கொள்ளவும்.

*உயர்ரக தேயிலையை நாடு பூராகவும் விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை 071 8617113,0770457780 இற்கு தொடர்பு கொள்ளவும்.

* சிறந்த அனுபவமுள்ள மோட்டார் வாகனம் திருத்தும் மெக்கானிக்,டிங்கரின செய்யவும் உடனடியாக ஆட்கள் தேவை. சம்பளம் 25000 - 30000 வரை தங்குமிட வசதி உண்டு 0777 661886 இற்கு தொடர்புகொள்ளவும் (கொழும்பு)

* நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் O/L, A/L சித்தி பெற்றவர்களுக்கு பயிற்சியின் பின்னர் நிரந்தர தொழில் வாய்ப்பிற்கான சந்தர்ப்பம். சம்பளம் 35000 மேல். 075 6599153, 071 255 7397 இற்கு தொடர்பு கொள்ளவும்.

* DMI (Pvt) பல்தேசிய நிறுவன வலையமைப்புக்கு நாடு பூராகவும் பிரதான 18 நகரங்களில் பரவியுள்ள புதிய கிளைகளுக்கு வெற்றிடம் சிலவற்றிற்கு O/L லிருந்து மேல் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் சம்பளம் 35000 மேல் 011 3110613, 0773620987, 0719250233 இற்கு தொடர்பு கொள்ளவும்.

* **American Company** கிளைகளுக்கான பயிலுனர்கள் உடனடியாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். Management Frainec க்கான பயிற்சியுள்ள பயிற்சிக்காலம் 4-6 இடையில் 10000 - 20000 பயிற்சியற்ற பயிற்சியின் பின்னர் 70,000க்கும் கூடுதலான சம்பளம். 077 3466511,081 4907338 இற்கு தொடர்பு கொள்ளவும்.

* யாழ் நகரில் அமைந்துள்ள சைவ உணவகத்திற்கு சமையலகாரர்கள், தேனீா தயாரிப்பாளர்கள், உணவு பரிமாறுபவர்கள் தேவை. அனுவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 078 9118610, 0777448475 இற்கு தொடர்பு கொள்ளவும்.

* பிரபல CCTV நிறுவனமொன்றுக்கு விற்பனை முகவர்கள தேவை. வடகிழக்கில் உள்ளவர்கள் விரும்பத்தக் கது. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங் கப்படும். 071 5340396, 4342466 இற்கு தொடர்பு கொள்ளவும்.

# பின்லேடனின் வெளியுலகத் தொடர்புகள் கண்டெடுத்த தொலைபேசி மூலம் புதிய தகவல்

(வொஷிங்டன்)

பின்லேடன் கொல்லப்பட்ட இடத்திலிருந்து எடுக்கப்பட்ட செல்போன் ஒன்று ஆராயப்பட்டதில், புதிய தகவல்கள் கிடைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளது சி.ஐ.ஏ. தலைமையகம். ஆராயப்பட்ட செல்போனின் உரிமையாளர், பின்லேடனின் நம்பிக்கைக்குரிய செய்திக்காவி எனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த செய்திக்காவி மூலமாகவே பின்லேடன் தனது வெளியுலகத் தொடர்புகளை மேற கொண்டு வந்திருந்தார். (பின்லேடன் கொல்லப்பட்டபோது, அவரும் கொல்லப்பட்டு விடடார்)

கைப்பற்றப்பட்ட கைத்தொலைபேசியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட அழைப்புகளில் சில ஹரகட்-உல்-முஜாகிடீன் என்ற அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவருக்குச் சென்றிருப்பது தெரிய வந்துள்ளது. இது, பாகிஸ்தானுக்குள் செயற்படும் பலம் வாய்ந்த தீவிரவாத அமைப்புகளில் ஒன்று.

இந்த அமைப்பினருடன் பின்லேடனின் செய்திக்காவி தொடர்பில் இருந்ததை வைத்து, இவர்களே பின்லேடனின் பாகிஸ்தான் மறைவிடத்தையும் ஏற்பாடு செய்திருக்கலாம் என்று கூறுகிறது சி.ஐ.ஏ.

ஆப்கானிஸ்தானின் டோரா-போரா குகைகளிலிருந்து பின்லேடன் பாகிஸ்தான்வரை வந்து சேர்ந்ததற்கும் இந்தத் தீவிரவாத அமைப்பினரே உதவி செய்திருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகின்றது.

சி.ஐ.ஏ.யின் கண்டுபிடிப்பிலுள்ள மற்றொரு விஷயம்தான், இங்கு வில்லங்கமானது.

ஹரகட்-உல்-முஜாகிடீன் இயக்க முக்கியஸ்தரின் செல்போன் இலக்கத்திலிருந்து வெளியே சென்ற அழைப்புகள்



பற்றிய விபரங்களையும் சி.ஐ.ஏ சேகரித்திருக்கின்றது.

ஹரகட்-உல்-முஜாகிடீன் இயக்க முக்கியஸ்தரின் செல்போன் இலக்கத்திலிருந்து அழைப்புகள் சென்ற இடங்களில் ஒரு இலக்கம் முக்கியமானது. அந்த இலக்கம், பாகிஸ்தான் உளவுத்துறை உயரதிகாரி ஒருவரின் தனிப்பட்ட செல்போன் இலக்கம்.

இந்தத் தகவலை வெளியிட்டுள்ள சி.ஐ.ஏ. இதற்கு பாகிஸ்தான் என்ன விளக்கம் கொடுக்

# சீன பல்கலைக்கழகங்களில் அறிமுகமாகிறது உளவாளிகளுக்கான விசேட பாடத்திட்டம்

(ஷங்காய்)

இந்தக் கல்வியாண்டிலிருந்து சில பல்கலைக்கழகங்களில் புதிய பாடநெறி ஒன்றை அறிமுகப்படுத்துகிறது சீனா. இந்தப் புதிய பாடநெறி என்ன தெரியுமா? உளவு பார்த்தல் ஆகும்.

உளவாளிகளுக்கான விசேட பாடத்திட்டம் சீனாவின் 8 பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாடத்திட்டத்தில் கல்வி பயின்று பட்டம் பெறுபவர்கள், நேரடியாகச் சீன உளவுத்துறை யில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

பீஜிங், ஷங்காய், ஹனன், ஷியன், குவிங்டோ, ஹார்பின் ஆகிய நகரங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் உளவாளிகளுக்கான பட்டப்படிப்பு நடைபெறுகின்றது. சீனாவில் இந்தப் புதிய திட் டம் அறிமுகப்படுத்தப்பட்டதை மேலை நாடுகள் கொளுசம் கவலையுடன்தான் கவனிக்கின்றன. பிரிட்டிஷ் உளவுத்துறை MI 5, சீன உளவுத்துறையின் நடவடிக்கைகள் பிரிட்டனின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் உள்ளன என ஏற்கனவே தெரிவித்துள்ளது. ஒரு விஷயம். வெளிநாட்டு மாணவர்களுக்கு இந்தப் படிப்பில் அனுமதியில்லை.

# சிறைக்குள் அடைக்கப்பட்ட அமைச்சரை காணவில்லையென்கிறது பொலிஸ்

உலகச் செய்திகள்

(சிம்பாப்வே)

சிறையில் அடைக்கப்பட்ட அமைச்சர் ஒருவரைக் காணவில்லை என அறிவித்திருக்கின்றது சிம்பாப்வே பொலிஸ் இலாகா. காணாமல்போயுள்ள அமைச்சர் ஆளும் கூட்டணியைச் சேர்ந்தவர்தான். ஆனால், ஜனாதிபதி ராபர்ட் முகாபேயை பொய்யர் என இவர் கூறியிருந்தார்!

ஜேம்சன் டிம்பா என்ற இந்த அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார். பிராந்திய மாநாடு ஒன்றில் பேசும்போது, ஜனாதிபதி முகாபே, சொல்வது எதையும் செய்வதில்லை. அவர் ஒரு வடிகட்டிய பொய்யர் என்று இவர் பேசியதையடுத்தே, கைது செய்யப்பட்டிருந்தார்.

சிம்பாப்வே நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி, நாட்டின் ஜனாதிபதியை தரக்குறைவாக விமர்சிப்பது, தண்டனைக்குரிய குற்றம்.

அமைச்சரின் சட்டத்தரணிகள் அவரைச் சந்திப்பதற்காக சிறைச்சாலைக்குச் சென்றபோது, அமைச்சரை அவரது சிறைக்கூடத்தில் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அப்படியானால், அவர் சிறையிலிருந்து தப்பிவிட்டாரா? என்று கேட்டபோது, அதற்கும் இல்லை என்ற பதிலே கொடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் கட்சி (ஸ்வான் கிரை கட்சி) பேச்சாளர் டக்ளஸ் முவன்சோரா, எமது கட்சியின் அனுதாபிகள் பொலிஸ் இலாகாவிலும் இருக்கிறார்கள். அமைச்சர் சிறைக்குள் வைத்துக் கொல்லப்பட்டு விட்டதாக அவர்கள் எமக்குத் தகவல் அனுப்பியுள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை விமர்சித்த அமைச்சருக்கே இந்தக் கதியென்றால், பொதுமக்கள் ஜனாதிபதியை பற்றி வாய் திறப்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது போலிருக்கிறதே.

# எனது இரண்டாவது ...

(14 ஆம் பக்கத் தொடாசசி..)

ஆனால் மறுபக்கமாகப் பார்த்தால் நான் ஏதோவொரு வகையில் அவர்களது தீய செயற்பாடுகளை எதிர்த்ததாலேயே, அவர்கள் என்னை கைது செய்து சித்திரவதைக்குட்படுத்தினர் என்பதே உண்மையாகும். அதே வகையில் பார்த்தால் மனித குல விரோதிகளான புலிகள் எனக்கு மாபெரும் கௌரவதை வழங்கியுள்ளனர் என்றே கூற வேண்டும். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மனிதர்கள் எல்லோரும் பிறக்கின்றனர் வாழ்கின்றனர். இனப்பெருக்கம் செய்கின்றனர். தமது சந்ததிகளுக்காக சொத்துக்களைத் தேடி வைத்துவிட்டு மரணிக்கின்றனர். சொத்துத் தேடுவதைத் தவிர ஏனைய அனைத்தையும் மிருகங்களும் கூடச் செய்கின்றன. எவன் ஒருவன் தான் வாழும் காலத்தில் தனது சக மனிதனுக்கு எதிராகவும், தன்னுடைய இன்றியமையாத சுற்றுச்சூழல் நண்பரகளான விலங்குகள், தாவரங்கள் என்பனவற்றுக்கு எதிராகவும் உருவாகும் அநீதிகளை எதிர்த்துப் போராடுகிறானோ, அவன் தான் உண்மையான மனிதன் ஆவான். இது நமது முன்னோடிகளால் எமக்கு தொடர்ந்து கிடைக்கப்பட்டு வரும் பேருண்மையாகும்.

அதேநேரத்தில், இடதுசாரித்துவம் பேசியவர்கள் சிலரும், மாற்றுக் கருத்துக் கதைத்தவர்களும், மனித உரிமைக் கோசம் போட்டவர்களும் சந்தர்ப்பவாதிகளாகவும், பதவி வேட்டைக்காரர்களாகவும், ஒதோலிகளாகவும் மாறிப் புலிகளின் காலடியில் சரணாகதி அடைந்துவிட்ட நிலையிலும்கூட, உயிராபத்துகள், பல இடர்ப்பாடுகள் வந்த போதிலும் நிலை தளும்பாது நின்று, புலிகளின் பாசிசச் செயற்பாடுகளை இறுதிவரை நம்பிக்கையுடன் எதிர்த்துப் போராடிய இன்றும் போராடுகின்ற உண்மையான முறபோக்கு ஜனநாயக சக்திகளுக்கும் சிரம் தாழ்த்துகின்றேன்

அன்புடனும்
தோழமையுடனும்,
மணியம்.

# பதிவிறக்கப் பெட்டகம்

**பொ**துவாக என்னை யாரிடமும் எழுத்தாளர் என்று அறிமுகம் செய்துகொள்ள விரும்புவதில்லை. நண்பர்களிடமும் என்னை அப்படி அறிமுகம் செய்யலாகாது என சொல்லியிருப்பேன். அனுபவ அமைதி.

ஆனாலும் சில நண்பர்களுக்கு தாங்காது. தன் வட்டத்தில் இப்படி ஒரு விசித்திர உயிர் இருப்பதை பிற நண்பர்களுக்குச் சொல்லும் பெருமையை ஏன் இழக்க வேண்டும்? “சார் பெரிய ரைட்டர்!” என்று நம் பக்கம் கைகாட்டி சொன்னார் முன்பு ஒரு நண்பர். “அப்டியா சந்தோஷம். எந்த ஸ்டேஷனிலே சார்?” என்றார் கனத்த தொப்பையும் காக்கைச்சிறகு மீசையும் கொண்ட அவர்...

அதிகாரிகள் மற்றும் பெரியமனிதர்கள் தங்களுக்கு எதையும் தெரியாது என்று சொல்லிக் கொள்வதில்லை. அவர்கள் எழுத்தாளனை வழிநடத்தும் பொறுப்பில் இருக்கிறார்கள். ஆகவே உடனே உட்காரச் சொல்லிவிடுகிறார்கள். அரைமணிநேரம் அவர்கள் ஃபைல்களை பார்க்க, குளிர்சாதன அறைக்குள் நான் நாடி ஒடுங்கி நா தளர்ந்து கண்ணாடித் தாளெடைக் குமிழுக்குள் ஒளியைப் பார்த்தபடி ஒடுங்கி இருப்பேன். மூடிவிட்டு நிமிர்ந்து கண்ணாடியை கழற்றிவிட்டு ஒரு புன்னகை. “ஸோ... யூ ஆர் எ ரைட்டர். குட்” (எழுத்தாளனிடம் ஆங்கிலத்தில் பேச வேண்டும்.)

“பொதுவா நான் யாரையும் இதுமாதிரி முன்னாடி உக்கார வைக்கிறது இல்ல. ஆனா நீங்க ரைட்டர்னு சொல்றீங்க... ரைட்டர்ஸெல்லாம் நாட்டு நலனுக்காக எழுதணும். இப்ப நான் படிக்கிறதில்லை. ஸீ, பொறுப்பு அதிகம். ஆக்சுவலி, நேரமே இல்ல. சின்னவயசிலே நெறைய படிச்சிருக்கேன்... ஆர்க்கே நாராயணன்னு ஒருத்தர் மால்குடி சுபான்னு ஒரு நாவல் எழுதியிருக்கார். குட் வேர்க். இப்ப இருக்காரா?”

“இல்ல சார். போயிட்டார்”

“நைஸ். அப்றம்” சிந்தனை பறக்க சுழல் நாற்காலியில் மல்லாந்து “எ லொட் ஆஃப் புக்ஸ் யூ நோ... பெர்னாட் ஷான்னு ஒருத்தர். நாடகம்லாம் எழுதியிருக்கார். பிரிட்டிஷ் மேன்”

“அவரும் போயிட்டார் சார்”

“நைஸ்” சட்டென்று தீவிரமடைந்து “குட். வாட் கென் ஐ டு ஃபோர் யூ?”

பெரியமனிதர்களை நான் மிகமிகக் குறைவாகவே சந்தித்திருக்கிறேன். பயம் காரணமாக தவிர்த்துவிடுவேன். ஆனால் பொதுநிகழ்ச்சிகளில் மாட்டிக் கொள்வதுண்டு. அடிப்பொடியோ அமைப்பாளரோ குனிந்து பணிந்து குழைந்து நெளிந்து கும்பிட்டு சிரித்து “இவரு ஜெயமோகன். நெறைய எழுதறாரு”

பெரியமனிதர் அழகாக புன்னகைசெய்து “அப்டியா. நல்லது. நல்லா எழுதுங்க... சிறப்பா செய்யுங்க” என்று கைகூப்பி சென்றுவிட்டால் தப்பித்தேன். அவருக்கு தானொரு அறிவுஜீவி என்ற எண்ணம் இருந்தால் நின்று மேலும் ஒரு புன்னகையுடன். “இப்ப என்ன எழுதறீங்க?”

“விஷ்ணுபுரம்ணு ஒரு நாவல்”

அதை காதில் வாங்காமல் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு “எழுதறப்ப நம்ம ஆத்மா அதில இருக்கணும். இப்ப திருக்குறளைப் பாருங்க. கொக்கொக்க கூம்பும் பருவத்துண்ணு சொல்றார். அதில ஆழமான கருத்து இருக்கு. யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலைன்னு திருமூலர் சொன்னாப்ல நாமதான் எல்லாத்தையும் நுட்பமா பாத்து எழுதணும். நம்ம சைவத்திலே எவ்ளவோ இருக்கு. இப்ப யாரும் அந்தளவுக்கு பாத்து எழுதறதில்லை. அருணை வடிவேலு மொதலி எங்க அப்பாவைப் பாக்க வருவார். பாவம் கஷ்டப்பட்டவர். அப்பா அஞ்சோ பத்தோ கொடுத்து அனுப்புவார். அவரு எழுதின சைவசித்தாந்த புஸ்தகத்தை படிச்சிருக்கிறிகளா?”

“இல்லீங்க”

“படிக்கணும். படிச்சாத்தான் புத்தி தெளியும். புத்தி தெளிஞ்சா சித்தி”

அடிப்பொடி, அமைப்பாளர், சூழ நிற்போர் அனைவரும் மெய்ஞானம் கேட்ட பெரும்பரவசத்தை காட்ட பெரியமனிதர் தனனடக்கமாகப் புன்னகைசெய்து “அப்ப பாப்போம். எப்பவாவது வாங்க பேசுவோம்.. பேச நெறைய விஷயமிருக்கு... பேசப் பேசத்தான் ஈசன்”

“சிவஞானம், அய்யா ஃபோன் நம்பரை வாங்கிக்கோ” அவர் முன்னகர... மீண்டும் பரவச அலை.

- ஜெயமோகன்.

அவனிடம் பணம் தாராளமாகவே இருக்கிறது. அதனால் தாராளமாகவே அவனிடம் பலரும் முதுகெலும்பில்லாமல் ஒளிவுமறைவில்லாமலும் மறைவாகவும் நடந்து கொள்கிறார்கள். இலக்கிய உலகில்தான் என்ன வாழ்ந்தது? ஒரு பெரிய கையின் உதவியில்லாமல் இங்கும் அப்படி உரிய இடத்திற்கு வரமுடிகிறதா?....

அவன் அப்பேர்ப்பட்ட அயனான எழுத்தாளனாகவே இருக்கட்டுமே. திறமை இருந்தால் அதை ஆக்கிரமிப்பதற்குத்தான் பயன்படுத்த வேண்டுமா? நம் நாட்டில் எப்பொழுதுமே இந்த பலவீனமும் இருந்துகொண்டேதான் இருந்திருக்கிறது. நமக்கு வேறு எது வராவிட்டாலும் இந்தக் குரு-சிஷ்ய பாவம் நன்றாக வந்திருக்கிறது. யார் பின்னாவது நடந்து கொள்ளத்தான் நாம் நூற்றாண்டுகளாகக் கற்றுக்கொண்டிருக்கிறோம்....

வெறும் நாய்ப் பிழைப்பு. ஒரு சமயத்தில் வாலை ஆட்ட வேண்டும் ஒரு சமயத்தில் மேலே கட்டிப் புரள வேண்டும் ஒரு சமயத்தில் காலை “நக்கு, நக்கு” என்று நக்க வேண்டும். பிறகு ஒரு வேளைக்காகக் காத்துக்கொண்டிருந்து காரியம் கைகூடிய பிறகு குரைப்பதும் கடித்துக் குதறுவதும் சகஜமாக வரவே செய்கிறது. இந்த நாய்கள் நகரத்தில் நாம் எல்லோருமே இருக்கிறோம்.

- நகுலன் (நாவலில்).

### தேனீ இணைய தளத்தில் தோழர் மணியம் எழுதும் 'வதைமுகாம்' அனுபவத்தொடரிலிருந்து....

# எனது இரண்டாவது பிறப்பு

2009 மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதிப் போருடன் புலிகளுடனான அரசாங்கத்தின் 30 வருட கால யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. அந்த முடிவுடன் புலிகளால் இலங்கையில் - குறிப்பாக தமிழ் சமூகத்தில் உருவாக்கி வைத்திருந்த மனித நேயம், நாகரீகம் என்பன வற்றுக்கு அப்பால் உருவாக்கி வைத்திருந்த கொடூரமான பாசிச கட்டமைப்பு முற்றுமுழுதாக நொருங்கி விழுந்து மக்களுக்கு ஓரளவு நிம்மதியும் ஏற்பட்டது உண்மைதான்.

ஆனால் அதை அறுதியும் இறுதியுமான வெற்றியாக மக்கள் கருதி விடக் கூடாது. தமிழ் தேசியவாதத்தின் பெயரால் தமிழ் பிற்போக்கு உருவாக்கி வைத்திருந்த ஒரு கட்டமைப்பு மட்டுமே, அழிக்கப் பட்டுள்ளது என்பதே உண்மையாகும். அந்தக் கட்டமைப்பை உருவாக்கிய பிற்போக்குத் தமிழ்த் தேசியவாதம் (அதற்குரிய சரியான பதம் "யாழ்ப்பாணியம்" என்பதே. நாசிசம், பாசிசம், சியோனிசம், பார்ப்பனியம் என்ற சொற்கள் மனித விரோத செயற்பாடுகளை விளிக்க எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றனவோ, அவ்வாறான அர்த்தத்தில் "யாழ்ப்பாணியம்" என்ற சொல்லையும் நாம் பயன்படுத்த முடியும்) மீண்டும் மீண்டும் தமிழ்ச் சமூகத்தில் பாசிச சக்திகளை உருவாக்க முயன்று வருகிறது. அது தனது இறுதி மூச்சுவரை அதைச் செய்து கொண்டே இருக்கும். இதில் இன்னொரு விசேட அம்சம் என்னவெனில், தற்போது தமிழ் பாசிசம் சர்வதேசிய ரீதியாக நன்கு வேரூன்றியுள்ளதுடன், அது முன்னெப்போதையையும்விட நெருக்கமான ஏகாதிபத்தியத் தொடர்புகளையும் கொண்டுமுள்ளது என்பதாகும்.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் புலிகளை தமது "மீட்பர்கள்" என்றும், "விடுதலை வீரர்கள்" என்றும், ஏன் "கடவுளர்கள்" என்றும் கருதிய ஒரு காலம் இருந்தது. இன்றும்கூட அவ்வாறான ஒரு பிம்பத்தை மக்கள் மத்தியில் உருவாக்க சில சக்திகள் முயன்று வருகின்றனர். ஆனால் அவர்களது நிஜமுகம் என்ன என்பதை எனது இந்த அனுபவத்தொடர் ஓரளவு தன்னும் மக்களுக்கு விளக்கும் என நான் நம்புகின்றேன். நான் அவர்களது கைதியாக இருந்த காலத்தில் நான் அனுபவித்த உடல் - உள வேதனைகளை மட்டுமின்றி, அவர்களால் அந்தக் காலகட்டத்தில் என்னுடன் வைக்கப்பட்டிருந்த ஏனைய கைதிகள் அனுபவித்த வேதனைகளையும் இங்கு பதிவு செய்வது அவசியம் என்று கருதுகின்றேன். இதில் அவர்களது இயக்க உறுப்பினர்களாக இருக்க நிர்ப்பந்திக்கப்பட்ட "சீவன்களின்" துன்பங்களையும் உள்ளடக்குவது அவசியமானது.

புலிகளால் நான் 1991 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு, 1993 ஜுன் 06 ஆம் திகதி வரை சுமார் ஒன்றரை ஆண்டுகள் அவர்களது வதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டேன். அவர்கள் "மனமிரங்கி" என்னை விடுதலை செய்திராவிட்டால், இன்று நான் உங்களுடன் எனது கருத்துகளைப் பகிர்வதற்கு வாய்ப்பே இருந்திருக்காது. அவர்கள் என்னை விடுதலை செய்ததை எனது இரண்டாவது பிறப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

எனது புலிகள் பற்றிய அனுபவங்கள் அவர்களின் கொடூரமான உருவத்தின் ஒரு வெட்டுமுகம் மட்டுமே. அதாவது "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது போல. அவர்களுடைய உண்மையான தோற்றத்தை வெளிப்படுத்த இது போதுமானதல்ல. அதனை முழுமையாகக் கொண்டுவருவதாக இருந்தால், அவர்களால் சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டு, ஏதோ சில காரணங்களால் தப்பிப் பிழைத்து வெளியே வந்து, தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இன்னமும் பயத்துடன் முகம் காட்டாது வாழும் நூற்றுக்கணக்கான முன்னாள் கைதிகள் முன்வர வேண்டும். அது அவர்கள் தமிழ் சமூகத்துக்கும், மனித குலத்திற்கும் செய்யும் வரலாற்றுக் கடமையாகும்.

எனது புலி வதை முகாம் அனுபவங்கள், அது ஏற்பட்டு 18 வருடங்கள் தாமதமாக வெளிவருவதற்கு காரணங்கள் உண்டு. நான் விடுதலையாகி வெளியே வந்ததும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழ்ந்து வந்த எனது ஆத்ம தோழர்களும், நண்பர்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும், வேறு பல சமூக ஆர்வலர்களும், நான் புலிகளின் இரும்புப் பிடியின் கீழ் இருந்தபோது பட்ட அவலங்களின் துன்பங்களின் அனுபவங்களை எழுத்தில் கொண்டு வந்து, உலகின் முன் வெளிச்சத்தில் வைக்கும்படி தொடர்ந்து வற்புறுத்தி வந்தனர். ஆனால் 1995 இல் புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டியடிக்கப்படும் வரை, நான் அவர்களது தீவிர கண்காணிப்புக்குள் இருந்ததினால், அந்தச் சூழ்நிலையில் எனது சுண்டு விரலைக்கூட அவர்களுக்குத் தெரியாமல் அசைக்க முடியவில்லை.

1999 இல் நான் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி கொழும்பு சென்ற பின்னரும்கூட, அவர்களது வேவுக் கண்கள் என்னைப் பின்தொடர்ந்த வண்ணமே இருந்தன. மீண்டும் நான் அவர்களது தீவிர கண்காணிப்பு வட்டத்துக்குள் படிப்படியாகக் கொண்டு வரப்படுகிறேன் என்று உணர்ந்த நிலையில், தவிர்க்க முடியாமலும், மனம் விரும்பாத நிலையிலும், எனதும் எனது குடும்பத்தினதும் பாதுகாப்புக் கருதி நான் நாட்டை விட்டு 2004 டிசம்பர் 04 ஆம் திகதி வெளியேறினேன்.

நான் புலம்பெயர்ந்து குடியேறிய நாட்டிலும்கூட புலிகளின் மரண நிழல் என் போன்றவர்கள் மீது படிந்து கொண்டே இருந்தது. அதனால் வெளிநாட்டுக்குத் தப்பி வந்தும்கூட, கடந்த 6 வருடங்களாக ஓரளவு ஒதுங்கி மறைந்து வாழ வேண்டியே இருந்தது. இப்பொழுது புலிகள் தாயகத்தில் பெரும்பாலும் முற்று முழுதாக அழிக்கப்பட்டுவிட்ட நிலையிலும்கூட, இன்றும்கூட அவர்கள் வைத்திருக்கும் பலமான சர்வதேச வலைப்பின்னல் காரணமாக, அவர்களுக்கு எதிரானவர்களுக்கு உலகின் எந்த மூலையிலாவது பூரண பாதுகாப்புள்ளது என்று சொல்லமுடியாது.

இருப்பினும் எமக்குள்ள வரலாற்றுக் கடமையை ஏதாவதொரு சந்தர்ப்பத்திலாவது நாம் நிறைவேற்றியே தீர வேண்டும். அந்த உணர்வின் காரணமாகவே நான் இத்தொடரை எழுத எண்ணினேன்.

நான் இதை எழுதும்போது உண்மையுடனும் சத்தியத்துடனும் அணிவகுத்துச் செல்லவே எப்பொழுதும் விரும்புகின்றேன். புலிகள் என்னைக் கைது செய்ததால்தான் நான் அவர்கள் மீது கோபம் கொண்டு இதை எழுதுகிறேன் என்று சிலர் நினைக்கக்கூடும்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)



# பின்கதவால் சிரித்தபடி நுழைதல்

ஒரு சமூகத்தின் அரசியற் தலைவர் என்பது ஒருவர் வெகு வீச்சான எதிர்க் கடசியாகச் செயற்படுகிறார் என்பதனாலோ அல்லது அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிறாரா என்பதை வைத்தோ அவரின் சமூகரீதியான தலைமைத்துவ தகுதியை நிர்ணயிக்க முடியாது. ஒருவர் நேர்மையானவரா? அவர் மக்களுக்கு உண்மையில் தம்மைத் தியாகம் செய்து சேவை செய்பவரா? அவர் தனக்குக் கிடைத்துள்ள பதவியையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்தி பணம் சம்பாதிப்பதிலும் சுயசுகங்கள் காண்பதிலும் குறியாக இருப்பவரா? போன்ற கேள்விகளை இங்கு யாரும் எழுப்புவதில்லை.

எனவே, தலைவராக ஆனவர் அவரது சமூக மக்களால் தேர்தலில் ரகசியமான வாக்குகள் மூலமாக அங்கீகரிக்கப்பட்டவரா இல்லையா என்பதை வைத்தே இங்கு ஒருவரை அரசியற் தலைவரா இல்லையா என்பதை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. இந்த சமூகப் பிரமுகர்களிற் பலர் தமது தனிப்பட்ட நலன்களை அரசிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக அமைச்சர்களில் யாரையாவது நாடித் தானே பெற்றுக் கொள்கிறார்கள். அல்லது தமக்கு அணைவான அல்லது தம்மால் ஆதரிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரின் கைகளைப் பிடித்துத்தானே அமைச்சர்களின் கதவுகளைத் தட்டுகிறார்கள். இந்த வேளைகளில் எத்தனை பேர் அந்த அமைச்சரோ அல்லது அந்த பாராளுமன்ற உறுப்பினரோ நல்லவரா கெட்டவரா என்று சிந்திக்கிறார்கள்.

தமக்கு விருப்பமானவர்கள் அல்லது தமக்கு அனுசரணையாக இருப்பவர்கள் மட்டுமே நல்லவர் நேர்மையானவர் கொள்கை உறுதிகொண்டவர்கள் என்பதும் மற்றவர்களைத் துரோகிகள் என்பதும் தமிழ் சமூகத்துக்கு ஆரோக்கியமானதல்ல. ஒரு தலைவர் பிழையானவர் என்றால் இவர் என்ன காரணங்களால் பிழையானவர் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்.

புலிகளுக்கு எதிராக இருந்தமை, புலிகளின் அழிவுக்கு துணையாகச் செயற்பட்டமை, அந்தந்தக் கட்டங்களில் ஆட்சியில் இருக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கு அனுசரணையாக இருக்கின்றமை என்பதெல்லாம் தமிழ் தலைமையாக இருப்பதற்கு விரோதமான குணாம்சங்களாகக் கொள்வதே செல்வாக்கு மிக்க தமிழ் அரசியற் கலாசாரமாக உள்ளமையை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இந்தக் கலாசாரத்தின்படி அரசாங்கத்துடன் கள்ள உறவுகளை பின்கதவுகளால் வைத்துக் கொள்ளலாம், இராணுவம் பொலிஸ் தவிர வேறெந்த அரச பதவியையும் பெற்றுக் கொள்ளலாம். இந்தக் கலாசாரம் சமூக மற்றும் பொதுமக்கள் விரோதங்களை வெறுப்பதில்லை, இங்கு வேண்டப்படுவதெல்லாம் தமிழ் இனப் பெருமை, தமிழ்த் தேசியப் பற்று, தமிழ்த் தாயகப் பாசம், தமிழர் சுய நிர்ணய உரிமைக் கோசம் போன்றவற்றின் ஆதரவாளன்போல பேசிக்கொண்டிருக்க வேண்டும் என்பதையே.. அத்துடன் அவ்வப்போது சிங்கள இராணுவத்தை எதிர்த்தும், சிங்கள அரசை வெருட்டுவதாகவும் சிங்கள இனத்தை வெறுப்பதாகவும் அறிக்கைகளை விட வேண்டும் என்ற வகையான குணங்களைக் கொண்டிருக்கின்றது.

பத்திரிகை அறிக்கைகளிலும் மேடைப் பேச்சுக்களிலும் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களைத் திட்டுவது, இராணுவத் தளபதிகளுக்கு எதிரான வெறுப்பேற்றும் கருத்துக்களை வெளியிடுவது. ஆனால் அவர்களை நேரிற் காணுகின்றபோதும் அவர்களுடன் ஒரே மேடையில் தோன்றுகின்ற போதும் அவர்களுக்கு கூழைக் கும்பிடுபோட்டுக் குனிந்து, வளைந்து புகழ்பாடுவதுவும்தான் தமிழ் அரசியற் கலாசாரமெனில் அந்தக் கலாசாரம் கண்டு நாம் வெட்கப்பட வேண்டும். அது தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு கெட்ட கலாசாரம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கு தமிழ் சமூகப் பிரமுகர்களால் காபந்து பண்ணப்படும் தமிழ்த் தேசியக் கலாசாரத்தில் மொழிப்பற்று, தமிழ்த் தேசம், தமிழர் சுயநிர்ணய உரிமை என்பதெல்லாம் ஓர் அரசியற் போர்வையின் வெவ்வேறு பக்கங்களே. இங்கிருக்கும் தமிழ்ப் பிரமுகர்கள் சமூகக் கூட்டத்தவர்கள் இந்தப் போர்வையைப் போர்த்துக் கொண்டவர்களின் எந்த வகையான சமூக விரோத மக்கள் விரோத செயல்களையும் கண்டுகொள்வதில்லை.

திரு. மகேஸ்வரன் அவர்கள் தமிழ்ச் தேசியம், தமிழர் தாயகம் தமிழர் சுயநிர்ணய உரிமை என்று சிறிது காலம் பேசினார். புலித் தலைமையின் அரவணைப்புக்கு உள்ளானார். யாழ்ப்பாணத்தின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினராகி விட்டார். பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் வேட்பாளராக நின்றபோதும் அவர் கொழும்புத் தமிழர்களால் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். அவர் பாராளுமன்றத்தில் தன்னையொரு தமிழ்த் தேசிய வீரனாக அடிக்கடி அரங்கேற்றங்கள் செய்ததனால் அவரும் ஒரு தமிழத் தேசிய அஞ்சா நெஞ்சனாக யாழ்ப்பாண பிரமுகர் சமூகத்தில் இடம் பிடித்துக்கொண்டார்.

அவர் எப்படிக் குறுகியகாலத்தில் அதுவும் புலிகளின் வரிகள், அரசின் பொருளாதாரத் தடைகள், போக்குவரத்து நெருக்கடி என்றெல்லாம் இருக்கையில் பெரும் கோடீஸ்வரனானார் என்பது பற்றி யாழ்ப்பாணத்து பிரமுகர்கள் சமூகத்தின் மத்தியில் குறிப்பிடக் கூடிய வகையில் வெறுப்பு, விமர்சனம் என்று பெரிதாக எதுவுமில்லை. புலிகளின் காலத்தில் யாழ்ப்பாணத்தின் பெரிய பெரிய பழைய வர்த்தகர்கள் பலர் ஓட்டாண்டிகளாகப் போனபோது எப்படி திரு மகேஸ்வரன் அவர்கள் மட்டும், பணம் சொத்துக்கள் எனக் குவிக்க முடிந்தது என்ற கேள்வி ஏதும் இல்லை. அப்படிப்பட்டவர் தமிழ் மக்களுக்கு மட்டும் எப்படி நேர்மையானவராக இருப்பார் என்ற கேள்வி யாழ்ப்பாணத்துப் பிரமுகர்கள் எவரிடமும் இல்லை.

திரு. மகேஸ்வரனையும் விட வியாபார நுட்பங்கள் கொண்ட திறமைசாலி என யாழ்ப்பாண வர்த்தகர்களால் புகழப்படும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திருமதி மகேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டே வென்றார். எனினும் யாழ்ப்பாண பிரமுகர்கள் சமூகத் தினால் அவர் தமிழர்களின் ஒரு தலைவரல்ல என்று நிராகரிக்கப்படுவதில்லை. தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்தியில் மட்டுமல்ல கொழும்பிலுள்ள இந்திய தூதரக மட்டத்திலும் அவருக் கென்று ஒரு தனி மரியாதையே உண்டு.

- *நன்றி: சூத்திரம்*

# தெரிவுக்குழு மூலமாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## திட்வட்டமாகக் கூறுகிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதுதான் சிறப்பானது. அதுவே எனது இறுதி முடிவும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

அந்த நிகழ்வில் கலந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு எவரும் எனக்கு நெருக்குதல் தரமுடியாது. சகல மக்களும் ஏற்கக் கூடிய தீர்வைத்தான் காணவேண்டும். அந்தத் தீர்வு, அறிவிக்கப் போகும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் மட்டுமே அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை அரசுடன் பேச்சு நடத்தி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தெரிவுக் குழுவை நிராகரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

பேச்சு மூலம் தீர்வை எட்டும் நம்பிக்கை அரசுக்கு இல்லை. மாற்றாக மாகாண சபை தேர்தல் நடத்த முடிவு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தாம் நடத்திவரும் பேச்சுக்களின் மூலம், தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு எட்டப்படும் என்ற நம்பிக்கை இல்லை என்று அரசதரப்பு தெரிவித்துள்ளது.

எனவே விரைவில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி முடிப்பதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடத்தப்பட்ட 7 சுற்றுப் பேச்சுக்களின் பின்னரும் அதிகாரப் பகிர்வு குறித்து இணக்கம் இதுவரை எட்டப்படவில்லை.

எதிர்காலத்திலும் எட்டப்படும் என்ற நம்பிக்கையும் மிகக் குறைவாகவே இருக்கிறது என்று அரச உயர் மட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

எனவே மாற்றீடாக மாகாண சபைத் தேர்தலை நடத்தித் தமிழ் மக்களிடம் ஆட்சி அதிகாரத்தை வழங்குவது என்று அரசு ஆலோசித்து வருகின்றது எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# நெல்லியடியில் சொல்லாடுகளம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவர் மன்றம் நடாத்தும் சுழலும் சொல்லாடுகளம் நிகழ்வு எதிர்வரும் ஜுலை மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கம்பராமாயணத்தில் மந்தரை சூழ்ச்சியால் பெரிதும் துன்பத்திற்கு ஆளான பாத்திரம் கைகேயி அல்ல தசரதனே என்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும், தசரதன் அல்ல இராமனே என்று த.அஜந்தகுமாரும், இராமன் அல்ல பரதனே என்று யாழ். பல்கலைக்கழக கணக்கியல் துறைத் தலைவர் தி.வேல்நம்பியும், பரதன் அல்ல இலக்குவனே என்று முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி ஆசிரியர் வேல்நந்தகுமாரும், இலக்குவன் அல்ல மந்தரையே என்று கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி ஆசிரியர் த.ஜீவராஜாவும், மந்தரை அல்ல கைகேயியே என்று சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேலும் வாதிடுவர். (10)

# கிளி. ஆனந்தபுரத்துக்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரை அண்டிய கிராமமாகிய ஆனந்தபுரம் கிழக்குப் பகுதி மக்களுக்கு இதுவரை சீரான மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

அத்துடன் அப்பகுதி மக்கள் பிரதான வீதிக்கு வரும் சிறு வீதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாகவும் இப்பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டு இம்மக்களுக்கு சரியான தீர்வுகள் கிடைக்கவில்லையென அக்கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன் இக்கிராமத்தில் தான் மின்சாரத்திணைக்கள அலுவலகம் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மின்சாரம் தேவையென விண்ணப்பங்கள் வழங்கி 3 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை மின்சாரத்தை வழங்கவில்லை எனவும் அவர் கவலையுடன் தெரிவித்தார்.

மக்களுக்கு அத்தியாவசியமானதாக இப்பிரச்சினை உள்ளதால் மிக விரைவில் இதனைப் பெற்றுத் தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறார்கள். (77)

# தேசத்தின் அபிவிருத்திக்கு அத்திவாரம் முன்பள்ளி ஆசிரியர்கள் முக்கிய பங்கு

## கிளிநொச்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர்



(கிளிநொச்சி)

கல்வித்துறையின் வளர்ச்சிக்கு அத்திவாரம் இடுபவர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள் அந்த வகையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டின் கல்வித் துறையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முதன்மையான இடமுண்டு என ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி உதயநகர் கிழக்கு றொசான் முன்பள்ளியில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக கற்பித்து வரும் முன்பள்ளி ஆசிரியர்கள் இதுவரை தமது உழைப்பிற்கான ஊதியத்தை பெறுவதில் பெரும் சிரமங்களையே எதிர்கொண்டு வந்தனர். தற்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் சந்திரசிறி அவர்களும் மற்றும் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து மேற்கொண்ட பெருமுயற்சியின் பயனாக பொதுவான ஒரு சம்பளத் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தினை நிரந்தரமாக்குவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் எனத் தெரிவித்தார்.

# ஆவணங்களைத் தொலைத்தவர்கள் அவதி இவர்களுக்கு வழிகாட்ட யாருமில்லை

(மண்டைதீவு)

கடந்த கால நாட்டின் சூழ்நிலை காரணமாகப் பரீட்சைப் பெறுபேறுகளைத் தவறவிட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தமது நியமனம் தொடர்பில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடலாம் என அச்சமும் கவலையும் வெளியிட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் முன்பள்ளிகளில் ஆசிரியர்களாக கடமையாற்றும் தீவகப் பகுதியைச் சேர்ந்தவர்களே இந்தக் கவலையை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில்,

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னி மற்றும் ஏனைய பகுதிகளில் தங்கியிருந்த காலத்தில் தமது பரீட்சைப் பெறுபேறு முடிவுகள் தவறவிடப்பட்டுள்ளன.

தீவகத்திலுள்ள சில பாடசாலைகள் 1991 இல் இருந்து 5 வருடங்களுக்கு மேல் இடம் பெயர்ந்ததால் பெறுபேறுகள் காணாமல் போய் இருந்தன.

இதனால் பரீட்சைப் பெறுபேறுகளை தவறவிட்ட முன்பள்ளி ஆசிரியர்களாகிய தாம் பெறுபேறுகளை நிரந்தர நியமனத்திற்காக சமர்ப்பிப்பதில் இடர்களை எதிர்கொள்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்பள்ளி ஆசிரியர் சேவையில் உள்ளவர்களை மீளாய்வு செய்து நிரந்தர சம்பளத் திட்டத்தில் உள்வாங்க அடுத்த மாதம் மேலதிகாரிகள் வரவுள்ள நிலையிலேயே அவர்கள் இக் கவலையை வெளியிடுகின்றனர்.(23)

### வடக்கில் தேர்தல்...

தமது தேர்தல் கால பிரச்சார பணிகளில் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்துள்ளன. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. வேட்பாளர்களுக்கான விசேட அறிவுறுத்தல்களையும் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பான பணிப்புரைகளையும் அமைச்சர் வழங்கினார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை கிராமிய மட்டங்களில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. தேர்தல் வேட்பாளர்கள் பிரதேசவாரியாக ஒன்றுகூடல்களையும் பிரச்சார கூட்டங்களையும் நடாத்தி வருகின்றனர்.

மேலும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை நேரில் அவதானிப்பதற்கும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து ஆராய்வதற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் விரைவில் யாழ்ப்பாண விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தலை ஒத்திவைக்க நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

தற்போது தேர்தல்களுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள பல உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை பிற்போடுமாறு கோரி பல அரசியல் கட்சிகள், நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளன.

இந்த நிலையில், தேர்தல்கள் ஆணையாளர் இது தொடர்பில், சட்டமா அதிபரின் ஆலோசனையினை பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளார். இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

64 உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலுக்கான வாக்களிப்புக்களை ஜுலை மாதம் 23 ஆம் திகதியன்று நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மாகாண மட்ட உதைபந்தாட்டம்

(வவுனியா)

வட மாகாண மட்டத்தில் மாவட்டங்களுக்கிடையில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டி நாளை காலை 7 மணிக்கு வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ். மாவட்ட அணி மோதவுள்ளது. (12)

### நெடுங்கேணியில்...

குறித்து நாடாளுமன்றத்தின் கவனத்திற்கும் தான் கொண்டு வந்துள்ள போதிலும், அதுபற்றி அரச தரப்பில் இருந்து எந்தவிதமான கருத்துக்களும் வெளியிடப்படவில்லை என்றும் கூறினார்.

### அரசுக்கெதிரான....

எதிர்ப்புகளை அடக்கியாள அரசாங்கம் முற்படுவதன் காரணமாகவே பிரஸ்தாப எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நாடுதழுவிய ரீதியில் முன்னெடுக்கத் தீர்மானித்திருப்பதாக ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிடுகின்றார்.

ஐக்கிய தேசியக்கட்சி ஏற்பாடு செய்துள்ள அரசாங்கத்திற்கெதிரான முதலாவது ஆர்ப்பாட்டம் எதிர்வரும் முதலாம் திகதி எல்பிட்டிய நகரத்திலும், இரண்டாவது ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி கண்டியிலும் நடாத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


### அரசுக்கு எதிராக...

என்றால் உங்களுக்கு அவ்வாறான நிலையேற்படுவதில் ஆச்சரியமென்ன இருக்கின்றது என்று சந்திரிக்கா பதிலுக்கு வினவியுள்ளார்.


இவ்வாறாக அரசாங்கத்துடன் அதிருப்தி கொண்டுள்ள அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை அணி சேர்த்து வரும் சந்திரிகா குமாரதுங்க, மிக விரைவில் தனது வாரிசுகளில் ஒருவரை அரசியலில் களமிறக்கவும், தீவிர அரசியல் ஈடுபாடுகளில் கலந்துகொள்ளவும் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## செய்திப்பாணம்

**அளவெட்டி கைவிசேசம் அடுத்துவரும் தேர்தலுக்கு உளவியல் யுத்தத்தை உருவாக்கும் - மளமளவென வாக்காளர் மனங்களில் வாழையடி வாழையெனும் ஊக்க மருந்தேற்றும் ஊசி!**



# நோயாளர்கள் எண்ணிக்கை திடீர் அதிகரிப்பு ஈடுகொடுக்கிறது யாழ்.போதனா வைத்தியசாலை




(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

அதிகரித்து வரும் விபத்துக்கள் மற்றும் பல்வேறுபட்ட நோய்களுக்காக சிகிச்சை பெற வருவோர் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. வெளிமாவட்டங்களில் இருந்தும் இங்கு சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

நாளொன்றுக்கு சராசரியாக வெளிநோயாளர் பிரிவிற்கு 800 பேரும், கிளினிக் சிகிச்சை நிலையத்திற்கு 1400 பேரும். விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோர் 350 பேரும் சிகிச்சை பெற்றுச் செல்வதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# வடகிழக்கு அபிவிருத்திக்கு 250 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வட கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென மீள் குடியேற்ற அமைச்சினால் 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாகாணங்களிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்கில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தச் செயற்றிட்டங்கள் இந்த வருட இறுதிக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிதியினை பயன்படுத்தி கைத்தொழில் துறை,புணரமைப்பு பணிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது மட்டகளப்பு மாவட்டத்தில் 2 மில்லியன் ரூபா செலவில் மின் விநியோகத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், வீடுகள் புணரமைப்புப் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன் மாவட்டத்தின் குளங்கள் மற்றும் பாலங்களை புனரமைப்பதற்கென 41 மில்லியன் ரூபா நிதியினை நீர்பாசன மற்றும் நீரியல்வள முகாமைத்துவ அமைச்சு ஒதுக்கியுள்ளது.

# உணவுப் பொருட்கள் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

அத்தியவசிய உணவு பொருட்களின் விலைகள் கடந்த சில மாதங்களில் இருந்து வீழ்ச்சி கண்டு வருவாதாக சர்வதேச வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 50 ரூபாவாக காணப்பட்டட தேங்காய் ஒன்றின் விலை தற்போது 36 ரூபாவாக வீழ்ச்சி (17%) கண்டுள்ளது. இதே போல வெள்ளை முட்டை 13.46 ரூபாவில் இருந்து 11.50 ரூபாவாகவும் மண் நிற முட்டை 14.40 ரூபாவில் இருந்து 12.12 ரூபாவாகவும் ஒரு கிலோ சீனி 97 ரூபாவில் இருந்து 93 ரூபாவாகவும் ஒரு கிலோ சம்பா அரிசி 69.29 ரூபாவில் இருந்து 67 ரூபாவாகவும் வீழ்ச்சி கண்டுள்ளதாக அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது காணப்படும் சாதகமான வாணிலை, உணவு உற்பத்தி மற்றும் விநியோகத்தில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தியுள்ளதனை தொடர்ந்து உணவு விலைகள் வீழ்ச்சி கண்டு வருகின்றன.

இதேவேளை, யாழ் - குடாநாட்டு சந்தைகளில் அத்தியவசிய உணவு பொருட்களின் விலைகள் மந்தமாகவே வீழ்ச்சி கண்டு வருவதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கு குடாநாட்டு மொத்த வியாபாரத்தில் நிலவும் தனியுரிமை மற்றும் அதிகளவான முகவர்களின் தலையீடுகள் காரணமாக உள்ளதாக சில்லறை விற்பனை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

# வவுனியாவில் நேற்று தேசிய மகாநாடு ரெலோ மத்திய குழு ஏகமனதாகத் தெரிவு

(வவுனியா)




ரெலோ இயக்கத்தின் தேசிய மகாநாடு வவுனியாவில் நேற்று இடம் பெற்றது. இம்மகாநாட்டில் கட்சியின் புதிய தலைவராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், அரசியல் பிரிவின் தலைவராகத் தெரிவானார்.

செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன், உப தலைவர் பிரசன்னா இந்திரகுமார், பொருளாளர் விந்தன் கனகரத்தினம், உதவி அரசியல் துறை உப தலைவர் எம்.கருணாகரன், நிர்வாகச் செயலாளர் கே.நித்தியானந்தம், சர்வதேச பொறுப்பாளர் ஆர்.இளங்கோ மற்றும் 21 பேரைக்கொண்ட மத்திய குழுவும், 11 பேரைக் கொண்ட தலைமைக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. தலைமைக் குழுவில் சட்டத்தரணி எஸ்.சிறிகாந்தா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோர் இடம் பெறுகின்றனர். (39)

# நயினாதீவுக்குப் பாதைப் படகு போக்குவரத்து நெருக்கடிக்கு தீர்வு

(ஊர்காவற்றுறை)

குறிகாட்டுவான்-நயினாதீவுக்கிடையில் கடற்பாதைச் சேவை ஒன்று ஆரம்பிப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிகாட்டுவான் - நயினாதீவுக்கு இடையில் பயணிகள் போக்குவரத்து, பொதிகள் வாகனங்களை ஏற்றும் சேவைகள் போன்றவற்றை மேற்கொள்ளும் நோக்கோடு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புதிய கடற்பாதைச் சேவை ஒன்று மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் யூலை மாதம் 01 ஆம் திகதிக்கு ஆரம்பமாகவுள்ள நயினாதீவு நாகபூஷணி அம்மன் வருடாந்த உற்சவத்திற்கு முன்னர் இப்பாதைச் சேவை ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை காலமும் பயணிகள் படகிலேயே பொதிகள், மோட்டார் சைக்கிள்கள் என்பன கொண்டு செல்லப்படுவதுடன், பெரிய வாகனங்களை குறிகாட்டுவான் பகுதியில் இருந்து நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க படகு மூலமே நயினாதீவுக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருந்தாகவும், இச்சேவையின் ஊடாக இந்நிலை மாற்றமடையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (27)

# கவிஞர் முருகையனின் நினைவுப் பேருரை

(யாழ்.நிருபர்)

ஈழத்தின் மூத்த கவிஞர் அமரர் கலாநிதி இ.முருகையனின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி நினைவுப் பேருரை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் உள்ள மாதர் சங்க மண்டபத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேசசபை முன்னைநாள் செயலாளர் த.நடராஜா தலைமையில் நடைபெறும்.

இந்தநிகழ்வில், அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளரும், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி ஸ்ரீபிரசாந்தன் ‘எது கவிதை’ என்ற தலைப்பில் நினைவுப் பேருரையாற்றவுள்ளார். (10)

# பல்கலை மாணவர்கள் பதிவுசெய்யக் கோரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு இந்த முறை தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாணவர்களின் வெட்டுப் புள்ளி அடிப்படையில் அவர்கள் அனுமதிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களின் விபரங்கள் தொடர்பில் ஏற்கனவே மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக மானிய ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

கடந்த 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களே வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் புதிய கல்வியாண்டு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

## இரத்ததானம் வழங்குவதில் யாழ்ப்பாணத்தில் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிராந்திய இரத்த நிலையத்திற்கு 2009 ஆம் ஆண்டு 15 பேர் 20 தடவைகளுக்கு மேல் இரத்ததானம் வழங்கியுள்ளதாக பிராந்திய இரத்த நிலையம் தெரிவித்துள்ளது.

விபத்துக்கள் மற்றும் முக்கியமான நோய்களால் பாதிக்கப்படுவர்களுக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு இரத்தம் தேவைப்பட்டிருந்தது.

2009 ஆம் ஆண்டில் 15 பேர் 20 தடவைகளுக்கு மேல் இரத்ததானம் வழங்கியிருப்பதுடன், 10 தொடக்கம் 20 தடவைகள் வரை 95 பேர் இரத்ததானம் வழங்கியிருக்கின்றனர் எனவும் பிராந்திய இரத்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்



### சின்னையா பரமலிங்கம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பரமலிங்கம் 25.06.2011 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, சிவலிங்கம் மற்றும் ஞானேஸ்வரி (கனடா), பாலசிங்கம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனலட்சுமி, யோகராசா ஆகியோரின் மைத்துனரும் சிவகரனின் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், கரைச்சி) அன்புத் தந்தையும், துஷ்யந்தியின் அன்பு மாமனும், லாகித்தியனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு கச்சாய் வீதி, கொடிகாமத்தில் உள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று இணுவில் தெற்கு தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

பிரதேச செயலகம்,
கரைச்சி.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(125)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.